சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 08	ஜனவரி - 2023	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 08	JANUARY - 2023	Rs. 15/-



அனைவருக்கும் இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

ஞான முதல்வன்
திருஞான சம்பந்தன்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, கும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-8 ஜனவரி - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



யாராவது உன்னை துன்புறுத்தி பார்க்க ஆசைபட்டால் அது, என்னை துன்புறுத்தி பார்பதற்குச் சமமாகும். நான் உன்னுடன் இருக்கையில் எதற்காகவும் கடுகளவு கூட கலங்காதே! எப்போதும் உனக்காக நான் இருக்கிறேன்.

பொருமையாக இரு, என்னிடம் பரிபூரணமாக நம்பிக்கை வை! உனக்கு வேண்டியதை செய்ய உனது தந்தையாகிய நான் காத்திருக்கிறேன். நிச்சயம் உனது வேண்டுதல்களை நிறைவேற்றி வைப்பேன்.

உனது கர்ம பலன்களின் ஆதிக்கத் தினால் நீ எண்ணிய எண்ணங்கள் நெடுங்காலமாக நிறைவேறாமல் தள்ளிப்போய்க் கொண்டிக்கின்றது என்று புலம்பிக்கொண்டிருக்கின்றாய் அல்லவா?

இந்த கடுமையான சூழ்நிலை உன்னை துன்பப்படுத்துவதற்காக இல்லை. உன்னை தயார் செய்வதற்காக, பொறுத்திரு, காத்திரு அனைத்தும் நடக்க போகிறது. துன்பங்கள் உன்னை விட்டு அகலபோகிறது. நிச்சயம் ஒருநாள் உன்னை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவேன்.

எவ்வளவு தூரம் சென்றிருந்தாலும் உன்னை இழுத்து கொண்டு வந்து எனது இரு உள்ளங்கைகளில் வைத்து பொக்கிஷம் போல் உன்னைப் பாது காப்பேன். துயரங்களை தருகின்ற நான் அதிலிருந்து எப்படி வெளியே வருவது என்ற போதனையையும் உனக்கு வழங்குவேன். கவலைப்படாதே, உனக்காக நான் இருக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து நான்காவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 04.12. 2022 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் புத்தக வெளியீட்டு விழா தொடங்கியது 10 மணிக்கு சென்ற மாத இதழில் சித்தர்கள் சீவ சமாதி தரிசன கட்டுரையில் இடம் பெற்றிருந்த திமிரி ஓம் ஸ்ரீ பத்மநாப சித்தரின் இளைய மகள் திருமதி. சிவகாமி அவர்களும், சுவாமிகளின் பேத்தி. திருமதி விஜயலட்சுமி அவர்களும் இம்மாத இதழை வெளியிட, பாபாவின் பரமபக்தை துரைப்பாக்கம் திருமதி. மோகனா அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் திரு. சுந்தர்சாய், திரு.உதி மூர்த்தி, திரு.வெங்கடேசன், திரு. அகஸ்டின், திரு.அய்யாகண்ணு ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சமுதாயத்தில் சமூக நீதியை நிலைநாட்ட பல காலங்கள் தோறும், பல துறைகளில் பல மகாத்மாக்கள் இந்தப் பூமியில் அவதரித்ததுண்டு. அவ்விதம் ஆன்மீகத்தில் பரிபூரணமாக சமநீதியை நிலைநாட்டிய ஒருவர் உண்டென்றால் அது நமது பகவான் சாயிநாதர்தான் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

தான் வாழும் காலத்தில் எளிமையா கவும், தனக்கென்று எதையும் சேர்த்து வைத்துக் கொள்ளாமலும், தன்னுடைய இறுதிக்காலத்தில் கூட தன்னிடம் இருந்த ஒன்பது ரூபாய்களை தானம் கொடுத்துவிட்டு சுத்தமான கைகளுடன் பிரபஞ்சத்தில் கலந்த மகாத்மா நமது பகவான் சாயி.

தன்னை நாடி வந்த பக்தர்களை எப்போதும் ஒரு வட்டத்திற்குள் வைத்துப் பார்த்ததில்லை சாயிநாதர்.

அதைபோன்று தானும் ஒரு வட்டத்திற்குள் நின்று நான் இந்த வட்டத்திற்கு சொந்தமானவன் என்று ஒருவரிடமும் வலியுறுத்தியதில்லை.



தன்னை அணுகிய பணக்காரர்களையும், ஏழைகளையும், உயர்ந்தோர்கள், தாழ்ந்தோர்கள் என்று சொல்லப்பட்டவர்களையும், ஆரோக்கியமானவர்களையும், நோயாளிகளையும், ஏன், மிருகங்களையும் கூட அவர் ஒருபோதும் பிரித்துப் பார்த்தில்லை.

அப்பேர்பட்ட புண்ணிய மகாத்மாவை, நாகரீகம் அடைந்த, மதவெறிபிடித்த, மானுடத்தின் மீது நம்பிக்கையற்ற ஒரு கூட்டம் நாயைக்கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனைக்கடித்த கதையாக, தற்போது புண்ணிய மகாத்மாவான நம் சாயி தேவனை கடிக்க ஆரம்பித்திருக்கின்றது.

சமத்துவ சம நீதியைக் காக்க வந்த அவதாரத்தை, இஸ்லாமியர் என்றும், பிராமணர் என்றும்,இந்த குலத்தைச் சேர்தவர், அந்தக் குலத்தைச் சேர்ந்தவர் என்றும், தமிழ்நாட்டு அய்யனார் கவனிக்கப்படவில்லை. வடநாட்டு சாய்பாபா வாழ்கிறார் என்றும், வாய் கூசாமல் கண்டதையும் பேசி திரிகின்ற கபட மனிதர்களுக்கு பாபாவின் பக்தர்கள் பாடம் புகட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

ஆம், எந்தவகையில், பாடம் புகட்டுவது அவர்கள் பேசுவதற்கு நாம் பதில் பேசுவதா? வேண்டாம் பாபாவின் குழந்தைகளான நமக்கும் அவர்களும் வித்தியாசம் இல்லாது போய்விடும். ஆகவே முன்னெப்போதையும் விட தீவிரமாக பாபாவை நேசிப்போம். முழுமையாக சரணாகதியடைவோம். நம்பிக்கை, பொறுமை என்ற தாரக மந்திரத்தை மனதில் அழுந்தப் பதிப்போம். அதுவே நாம் அவர்களுக்கு அளிக்கும் பதிலாகும். மற்றதை நமது சாய்தேவன் பார்த்துக் கொள்வார்.





புத்தக வெளியீட்டிற்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும், சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத் துடனும்,நிம்மதியுடனும் வாழ வேண் டும் என பிரார்த்தித்து நிறைவு செய் கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்

அப்துல் பாபாவின் குடில்

சாவடிக்கு எதிரில் இவரின் குடில் இருக்கிறது. பாபாவின் உத்தரவுகளை வார்த்தைகள் பிசகாமல் நிறைவேற்றுவார். பாபா அவரிடம் மிதமாக சாப்பிடு, குறைந்த நேரமே உறங்கு என்பார். எங்கெங்கு இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் உறங்கினார். பிறகு களிமண்ணால் ஆன குடிசையைக் கட்டினார். அது தான் நாம் இன்று பார்க்கும் அப்துல்லாவின் குடில்.



பாபாவிற்கு குளிப்பதற்கு தண்ணீர் எடுத்து வைப்பது, அவரது கப்னியை தோய்ப்பது, பாபா செல்லும் இடங்களில் உள்ள பாதையை சுத்தம் செய்வது போன்ற வேலைகளை பார்த்து வந்தார். பாபா காலையிலும், மாலையிலும் லெண்டி தோட்டத்திற்கு செல்லும்போது அவருடன் கூடவே செல்ல அனுமதி பெற்றிருந்தார்.

பாபாவின் பழைய புகைப்படங்கள், பாபா உபயோகப்படுத்திய சிம்டா, சட்கா தகரக் குவளை போன்றவற்றை இந்த குடிலில் காணலாம்.

பொங்கலோ பொங்கல்



பொங்கல் என்பது தமிழர்களால் பன்னெடுங்காலமாக சிறப்பாகக் கொண்டாடப்படும் ஓர் அறுவடைப் பண்டிகை ஆகும். இந்த விழா தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் மிக் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கை தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சர்க்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையிலிட்டுப் புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் சோறாக்கிக் சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.

நீர் வளம் கொண்ட இடங்களில் மூன்று வேளாண்மை நடக்கும். நீர் வளமில்லா இடங்களில் மழை நீர்த் தேக்கத்தால் ஒரு வேளாண்மைதான் விளைவிக்க முடியும். ஆகவே, மார்கழி, அல்லது தை மாத அறுவடையே நாடெங்கும் நிகழும்.

அறுவடை முடிந்து பெற்ற புத்தரிசி, கரும்பு, மஞ்சள், பனங்கிழங்கு, நம்முடைய கொடிவழிக் காய்கறிகளான அவரை, புடலை, கத்திரி, வாழை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு போன்றவையே படையலாக வைக்கப்படும்.

செந்நெற் பச்சரிசியைப் பெரும்பா லும் தவிடு போக்காமல் நீர் சேர்த்துச் சமைத்து பருப்புக் குழம்புடன் உண்பதும் மரபு. பொங்கு என்ற



சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்குவதால் பொங்கல்.

இந்த விழாவின் நடைமுறையைப் பார்த்தால், மெய்யியற் சமயங்கள் தமிழகத்தில் நிலைகொள்ளுவதற்கு முன்னாலிருந்தே, இனக்குழு வழி பாடுகள் நிலவிய போதே, இந்த விழாக் கொண்டாடுவது தொடங்கியிருக்க முடியும் என்பதையும் புரிந்து கொள்ள இயலும்.

பொங்கல் விழா, மக்களால் இயல் பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா.

உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல்.

தைப்பொங்கலுக்குச் சில நாள்க ளுக்கு முன்னரே தயாராகுதல் தொடங் கும். பொங்கலுக்குத் தேவையான பொருள்களை ஆயத்தப்படுத்திக் கொள்வர். தமிழீழம், தமிழ்நாடு போன்ற இடங்களில் புதுப்பானைகளை பலர் வாங்குவர்.

பொங்கல் விழா என்பது நான்கு நாள் விழாவாகும்.

முதல்நாள் போகி பண்டிகை என்பது 'மார்கழி' மாதம் முடிந்து 'தை' மாதம் ஆரம்பிக்கும் நேரம் வருகிறது. பழையன கழிந்து புதியது புகும் நாளாக இது கொண்டாடப்படுகிறது. பழையதாகி தேவையில்லாமல் ஆகிவிட்ட பொருட்களை இந்நா ளில் எரித்து விடுகிறோம். ஒரு பண்டி கையாக, கொண்டாட்டமாக இதைச் செய்கிறோம்.

இரண்டாம் நாள் தைப் பொங்கல் அதிகாலையில் சூரியன் எழுவதற்கு முன்பே குடும்பத்தினர் அனைவரும் எழுந்து குளித்து புத்தாடை அணிந்து புதிய பானையில் புதிய அரிசியில்

பொங்கலிட்டு, " பொங்கலோ பொங்கல்" என்று குலவையிட்டு சூரியன் உதித்த உடன் படையலிட்டு உற்றார் உறவினர்களோடு இயற்கைக்கு நன்றி தெரிவிப்பார்கள்.

மூன்றாம் நாள் மாட்டுப் பொங்கல் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே இந்நாளாகும். பொங்கலிட்ட பிறகு எச்சில் தண்ணீர் தெளித்தல் என்றொரு மரபு மதுரை மாவட்டத்தில் உண்டு. 'பொங்கலோ பொங்கல் ! மாட்டுப் பொங்கல்!

பட்டி பெருக! பால் பானை பொங்க! நோவும் பிணியும் தெரு வோடு போக!' என்று கூறி மாடு பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பர்.

நான்காம் நாள் விழா, காணும் பொங்கல் இந்நாளில் மக்கள் தங்கள் உற்றார் உறவினரைச் சென்று சந்தித்து தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர். இது பொதுவாக இந்தியாவில் மட்டுமே கொண்டாடப்படுகிறது.

வடமாநிலங்களில் சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கும் நாள் உண்டு. இந்தியாவின் வட மாநிலங்களில் இது மகர சங்கராந்தி எனவும் சங்கராந்தி எனவும் கொண்டாடப்படுகிறது. மகரம் என்றால் சூரியன் என்று பொருள்.

அனைவரும் நம்மால் இயன்ற அளவிற்கு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி இயற்கைக்கு நன்றி தெரிவிப்போம்.

"பொங்கலோ பொங்கல்"!

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்



நமது " சாய் மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ்" ஆரம்பிக்கப்பட்ட லீலையை படிப்பதற்குமுன், நமது குருநாதரின் எழுத்தார்வத்தைப் பற்றி சிறிது கூறிவிடுகிறேன்.

குரு அவர்களின் பள்ளிப்படிப்பு சிறிதுதான் எனினும், நிறைய வாசிப்பார்கள். அந்த வகையில் தான் ஒரு எழுத்தாளனாக வேண்டும் என்று விரும்பியிருக்கின்றார். அதன் வெளிப்பாடாக, சிறுகதை தொகுப்பு ஒன்றும், கவிதை தொகுப்பொன்றும் வெளியிட்டிருக்கின்றார்.

குருவின் எழுத்துக்கள் பெரும் பாலும், சமுதாய சிந்தனைகளாகவே இருக்கும். இயல்பான நடையுடன், ஆழ்ந்த கருத்துக்களை கொண்டிருக்கும். குறிப்பாக தன்னுடை எழுத்தில் ஆன்மீகம் பற்றி அவர் எழுதியதில்லை.

சமுதாய சிந்தனைக் கதைகளை மட்டுமே எழுதுவார்.

ஆரம்பக்காலத்தில், கதை, கவிதை களை ஏராளமாக எழுதி அனைத்து பத்திரிக்கைகளுக்கும் அனுப்பி வைப்பார். ஆனால் அவை சென்ற வேகத்தில் திரும்பிவிடும். வெளிவந்த ஓரிரெண்டு கதை கவிதைகளில் குருவின் பெயரை இருட்டடிப்பு செய்து வெளியிடுவார்கள்.

அப்போதெல்லாம் குரு மிகுந்த மன வேதனைப்படுவார்கள். அந்த காலகட்டத்தில் அருகில் இருந்து பார்த்த எனக்கும் மன வேதனை ஏற்படும். ஏன் இவரின் திறமைக்கு அங்கீகாரம் கிட்டவில்லை என்று யோசிப்பேன். ஆனால் நிச்சயம் ஒருநாள் குருவின் எழுத்து திறமை வெளிப்படும் என்று அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் இருந்தேன்.

அதன் பிறகு யாரையும் நம்பவேண்டாம். நாமே ஒரு புத்தகத்தை தொடங்கி நடத்தலாம் என்று திண்டுக்கல் மாவட்டம் கொடை ரோடு என்ற ஊரில் இருந்து "கொடை முரசு" என்றொரு மாதப்பத்திரிக் கையை குரு ஆரம்பித்தார். அதிலும் பணக்கஷ்டத்தோடு, மிகுந்த மனக்



கஷ்டத்தையும் மட்டுமே சம்பாதித்தார். ஒரு கட்டத்தில் அவர் எழுதுவதையே நிறுத்தி விட்டார்.

பிற்பாடு பாபாவால் ஆட் கொள்ளப்பட்டு "சாய் தியானாலயா" பிரார்த்தனை மையம் ஆரம்பித்து நடத்திக் கொண்டிருந்த சமயம். குருவிற்கு திரு.மாதவராஜ் என்றொரு நண்பர் அறிமுகமாகி, குருவின் திறமைகளை அறிந்து, சாயிபாபாவின் மீது இவ்வளவு பற்றாக இருக்கின்றீர்கள். பாபாவைப்பற்றி நிறைய கதைகளை மக்களிடம் கூறுகின்றீர்கள். நீங்கள் ஏன் பாபாவிற்காக ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்கக்கூடாது? என்று கேட்டிருக்கின்றார்.

அதற்கு குருவோ, தனக்கு நேர்ந்த பத்திரிக்கை அனுபவங்களை விளக்கி, பத்திரிக்கை நடத்துவதென்பது சுலபமான காரியம் இல்லை. அதற்கு நிறைய பணபலமும், ஆள் பலமும் வேண்டும். அதெல்லாம் என்னிடம் இல்லை. ஆகவே "என்னால் பத்திரிக்கை நடத்த முடியாது" என்று கூறியிருக்கின்றார்.

அதற்கு அந்த நண்பர்,உங்களது பொருளாதார நிலை எனக்குத் தெரியும். நீங்கள் பத்திரிக்கை நடத்தறது

கஷ்டம்தான். பாபா ஆரம்பித்து நடத்தறதுல அவருக்கேது கஷ்டம். நீங்கள் ஏன் நான் நடத்துறேன்னு நினைக்கறீங்க, பாபா நடத்துறதா நினையுங்களேன். என்று கூற, குருவிற்கும் "அதுவும் சரிதானே" என்று தோன்றியிருக்கின்றது.

ஆனாலும் இதெல்லாம் நடக்கின்ற காரியமா என்று மனதிற்குள் சற்றே சந்தேகப்பட்டுக் கொண்டே, இதில் பாபாவிற்கு விருப்பம் இருந்தால் தொடர்ந்து காரியம் நடக்கும். நாமும் இதில் ஒரு வேலைக்காரனாக இருந்து வேலை செய்வோம். பாபாவிற்கு விருப்பம் இல்லை என்றால் இந்த காரியம் நகராது. நாமும் மனதை தேற்றிக்கொள்ள வேண்டியதுதான். என்று முடிவெடுத்திருக்கின்றார்.

ஆனாலும் அன்றாட செலவிற்கே திண்டாடிக்கொண்டிருக்கும் நமக்கு பத்திரிக்கை நடத்தக்கூடிய அளவிற்கு பொருளாதாரம் எங்கே கிட்டப்போகின்றது என்ற சந்தேகத்துடன், பத்திரிக்கை பணிகளைப்பற்றி கவலையின்றி பாபாவின் பணிகளில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்.

இது நடந்தது 2018 சனவரி முதல் தேதியில், 15 ஆம் தேதி சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடந்த புத்தக கண்காட்சிக்காக குரு அவர்கள் சென்றிருந்தபோது எதிர்பாராத விதமாக அவரது பால்யகால நண்பர் ஒருவர் அவரை சந்தித்து தற்போதைய நிலவரம் பற்றி பேசிக் கொண்டிருந்திருக்கின்றார்.

எதிர்பாரத விதமாக, ஏன் நீங்கள் உங்களது எழுதும் திறமையை விட்டுவிட்டீர்கள். நன்றாக எழுதுவீர்களே, தற்போது சென்னையில்வேறு இருக்கின்றீர்கள். எழுதுங்களேன் என்று கூற, குருவும் "சாயியின் லீலைகளை" உணர்ந்தவாறு, உண்மைதான் ஒரு காலத்தில் நான் வேறு எதையோ எழுத ஆசைப்பட்டு எழுதினேன். ஆனால் அதை இந்த உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆயினும், தற்போது என் மனம் முழுமையாக ஆன்மீகத்தின் பக்கம் வசப்பட்டுவிட்டது. எனது ஒரே கருப்பொருளாக சாயிபாபா மட்டுமே என் சிந்தை முழுவதும் நிறைந்திருக்கிறார். நான் எப்படி வேறு விசயங்களைப் பற்றி எழுதுவேன் என்று வேண்டுமென்றே கூற,

அதற்கு அந்த நண்பர் அப்படியானால் பாபாவைப்பற்றி எழுதுங்கள். உங்களது சிந்தனையும், பணியும் ஒன்றாக இருக்கும்போது அது உங்களுக்கு இன்னும் ஆனந்தமாக இருக்கும் அல்லவா? என்று கூற குருவும், அப்படியே செய்கிறேன் என்று தன் மனதில் இருக்கும் பாபாவின் பத்திரிக்கையைப் பற்றி விவரிக்க, நண்பர் மகிழ்ந்து, என்னால் முடிந்த உதவியை உங்களுக்குச் செய்கிறேன் என்று உறுதியளித்திருக்கின்றார்.

மறுநாள் வியாழக்கிழமை. எதார்த்தமாக கோவையில் இருந்து பேசிய நண்பர் ஒருவரிடம், பாபா புத்தகத்தைப் பற்றிய விபரங்களை பகிர்ந்து கொள்ள, சற்றும் யோசிக்காத நண்பர் புத்தகத்தை பதிவு செய்ய ஆகும் செலவுகளுக்கு நான் பொறுப்பு. தற்போது என்னிடம் ரூ.3500 இருக்கின்றது. அதை முதல் தவணையாக அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் ஆக வேண்டி காரியங்களைப் பாருங்கள் என்று கூறி சொன்னபடி



உடனே அனுப்பிவைத்து விட்டார்,

குரு அவர்கள் பாபாவின் மகிமையை உணர்ந்து அன்று மாலை சபையில் நடைபெற்ற வழிபாட்டில் பாபாவின் புகழ் பரப்பும் புதிய மாத இதழைப் பற்றிய அறிவிப்பை வெளியிட, கூட்டத்தில் இருந்த ஸ்ரீ ரஞ்சனி என்ற கல்லூரி மாணவி ஒருத்தி, சற்றும் தாமதிக்காமல் தனது கையில் இருந்த நூரு ரூபாய் பணத்தை குருவிடம் வழங்கி என்னிடம் இப்போதைக்கு இவ்வளவுதான் உள்ளது. புத்தகத்திற்கு நன்கொடையாக வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்தாள்.

நான் அப்போதே நன்கு உணர்ந்தேன் பகவான் சாயி என் கணவரை கருவியாக வைத்து ஒரு புத்தகத்தை நடத்தப் போகிறார். எனது கணவரின் எழுத்துத் திறமையை உலகறியச் செய்யப் போகின்றார் என்பது புரிந்தது எனது பலகால கனவை நிறைவேற்றிய சாயிநாதருக்கு மனதிற்குள் நன்றி கூறிக்கொண்டேன்.

ஏனென்றால் அப்போது எங்களுக்கு அன்றாட சாப்பாட்டிற்கே சிரமப்படும் நிலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள பத்திரிக்கைக்கு எங்களால் ஒரு ரூபாய் கூட முதலீடு செய்ய முடியாத சூழல். ஆனால் பாபாவின் பத்திரிக்கையைப் பற்றி பேச்சு எழுந்ததுமே அதற்குண்டான தொகையையும், நண்பர்களையும் பாபாவே அனுப்பி வைக்கத் தொடங்கினார். குருவும் நம்பிக்கையுடன் மாத இதழுக்கு "சாயி மகராஜ்" என்ற தலைப்பை தேர்வு செய்தார்

இந்நிலையில் 02.02.2018 அன்று சாயி என் வாழ்க்கை உன்னோடுதான் என்ற புத்தகம் வெளியிடுகின்றார்கள். நீங்களும் வாருங்கள் சென்று வருவோம் என்று திரு. மாதவராஜ் அவர்கள்

அழைக்க, குருவும் அவ்விழாவிற்குச் செல்ல, அங்கு அதன் உதவி ஆசிரியர் திரு.கி. சிவநேசன் அவர்களிடம், திரு.மாதவராஜ் அவர்கள் நமது குருவை அறிமுகப்படுத்தி, இவரும் பாபாவின் புகழ் பாடுவதற்கென்று "சாயி மகராஜ்" என்ற மாத இதழை தொடங்க இருக்கின்றார். என்று அறிமுகப் படுத்தி வைக்க,

திரு. கி. சிவநேசன் அவர்கள், சற்றும் தாமதிக்காமல், ரொம்ப சந்தோசம் சாய்ராம். உங்களைப்போன்று இன்னும் பலபேர் பத்திரிக்கை நடத்தி பாபாவின் புகழை பரப்ப முன்வர வேண்டும். அவர்களுக்கெல்லாம் உங்களை நான் ஒரு முன்மாதிரியாகப் பார்க்கின்றேன். வாழ்த்துக்கள் நன்றாக நடத்துங்கள் என்று வாழ்த்தினார்.

அதன்பிறகு நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் குருவிற்கு பொன்னாடை போர்த்தி அம்மாத இதழை, "இறைநேசர்" என்ற இதழின் ஆசிரியர் திரு. அசோக்குமார் அவர்களை வெளியிட வைத்து, நமது குருவை பெற்றுக் கொள்ளச் செய்து வந்திருந்த பக்தர்களிடம், இறைநேசர் என்ற புத்தகத்தைப் பார்த்துத்தான் நான், சாயி என் வாழ்க்கை உன்னோடுதான் புத்தகத்தை ஆரம்பித்தேன்.

நம் புத்தகத்தை பார்த்து ஸ்ரீராம் சாய் ராம் அவர்கள் "சாய் மகராஜ்" புத்த கத்தை ஆரம்பித்துள்ளார் அவரது புத்தகமும், நமது புத்தகத்தைப்போன்று வளரவேண்டும் என்று வாழ்த்துவோம் என்று வாழ்த்தினார்.

அந்த விழாவின்மூலம் "இறைநேசர்" ஆசிரியர் திரு. அசோக்குமார் அவர்களின் அறிமுகமும், அவர்க ளின்மூலம் "ஆஞ்சநேயர் விஜயம்" திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களின் அறிமுகத்தையும், ஆலோசனைகளையும் கிடைக்கப் பெற்ற குரு அவர்கள் பாபாவின் லீலைகளை புரிந்து கொண்டு பத்திரிக்கை பணியில் முழுமனதாக தன்னை இணைத்துக் கொண்டார்.

பாபாவின் புகழ்பாடும் நமது "சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று வெளியிட்டாலும் குரு அவர்கள், இதழை தான் வெளியிடுகிறேன் என்ற எண்ணம் துளியும் இல்லாதவர். இதழ் பணியில் தன்னையும் ஒரு கடை நிலை ஊழியனாகவே இறுத்திக் கொள்வார்.

இதழ் ஆரம்பித்ததில் இருந்து இன்று வரை இதழ் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் பாபாவே முடிவு செய்கின்றார். அவரே கவனித்துக் கொள்கின்றார் என்பதை பல நேரங்களில் குருவும், அவருடன் இருந்து நானும் கண்ணார கண்டும் உணர்ந்தும் இருக்கின்றோம்.

முதல் இதழ் என்பதால் அனைத்து பக்தர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பால் மிகச்சிறப்பாக இதழ் வெளியிடப்பட்டது. பொருளாதார ரீதியாக எந்த கைப்பிடிப்பும் இல்லை. ஆனால் அடுத்த இதழ் வெளியிடும் தருணம். கையில் இருந்த பணத்தை அச்சகத்திற்கு முன்பணமாக கொடுத்து வேலையை ஆரம்பித்தாயிற்று. மீதிப்பணத்தை கொடுத்து புத்தகத்தை எடுத்து வர வேண்டும் கையிலோ சுத்தமாக பணம் இல்லை.நாளை இதழ் வெளியீட்டு விழா.

எல்லோருக்கும் தகவல் கொடுத் தாயிற்று. காலையில் பக்தர்கள்

வந்து விடுவார்கள். இன்று புத்தகம் எடுத்துவர வேண்டும். கையில் பணம் இல்லை. காலையில் இருந்து அமைதியாக அமர்ந்திருந்த குரு மாலை நான்கு மணிக்கு வண்டியை எடுத்துக் கொண்டு, நான் பிரஸ்க்குச் செல்கிறேன். அச்சக முதலாளியிடம் இதழ் வெளியிட்டுவிட்டு பணம் கொடுக்கின்றேன் என்று பேசிப்பார்க்கின்றேன்.

கொடுத்தால் பார்ப்போம். இல்லை என்றால் ஓரிரெண்டு புத்தகமாவது வாங்கி வருகிறேன். அதை வைத்து புத்தக வெளியீட்டை நடத்துவோம். பாபா நம்மை கைவிடமாட்டார் என்றபடி புறப்பட்டு போய்விட்டார்.

அவர் புறப்பட்டு சென்ற இரண்டு மணிநேரத்தில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத குருவின் ஆத்ம நண்பரும் அவரின் சீடருமான ஒருவர் வீட்டிற்கு வந்து குருவை காண வேண்டும் என்றார். நான் விபரத்தைக்கூறி, அவரை தொலைபேசியில் அழைக்கவா என்று கேட்க, வேண்டாம அம்மா, நான் இம்மாத பத்திரிக்கை பணிக்காக என்னாலான ஒரு சிறிய தொகையை காணிக்கையாக அளிக்கலாம என்று வந்தேன்.

பரவாயில்லை. இதை குரு வந்ததும் அவரிடம் கொடுத்து விடுங்கள் என்று ஒரு தொகையை பாபாவின் பாதத்தில் வைத்து விடைபெற்றுச் சென்றார். எனக்கோ, அடடா, குரு பணம் இல்லாமல் அச்சகத்திற்கு செல்கிறார். இங்கோ பணம் வந்து விட்டது. என்றபடி குருவிற்கு தகவல் சொல்லலாம் என்று தொலைபேசியில் அழைத்தால் அவர் எடுக்கவில்லை. அடுத்த ஒரு மணி நேரத்தில் குருவே புத்தகத்தோடு வீட்டிற்கு வந்து விட்டார்.

புத்தகத்தை இறக்கி வைத்துவிட்டு, குரு கூறினார். நான் பயந்து கொண்டே புத்தக வெளியீட்டிற்குப் பின் பணம் தருகிறேன் என்றேன் அதற்கு அச்சக உரிமையாளர், அதனால் என்ன மெதுவாக கொடுங்கள் என்று கூறி விட்டார். என்னை அவருக்கு முன்பின் தெரியாது.

என்னை நம்பி ஒரு பெரிய தொகையை விட்டுக் கொடுக்கின்றார என்றால், எல்லாம் பாபாவின் அருள் என்றவர் பாபாவின் பாதத்தில் இருந்த பணத்தைபார்த்து விபரம் கேட்க, நான் நடந்த விபரத்தைகூறி பணத்தை எடுத்து குருவின் கைகளில் கொடுத்தேன்.

குரு பணத்தை எண்ணிப்பார்த்து வியந்து போனார். ஏனெனில், அதில் அச்சகத்திற்கு எவ்வளவு பாக்கித் தொகையோ சரியாக அந்தத்தொகையே அதில் இருந்தது.

நம்முடைய நம்பிக்கைக்கும், பொறுமைக்கும் உகந்தவாறு தன் லீலை நடத்த கருணை வள்ளல் சாயிநாதருக்கு நிகர் யாருமுண்டோ?

இன்னும் சில லீலைகளை அடுத்த மாதமும் பார்ப்போம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

தொடர் –54

குருவைத் தேடி

நான் அந்த நிகழ்ச்சியை அன்றோடு மறந்து விட்டேன். ஏனென்றால் எங்களது கடைக்கு தினமும் இதைப்போன்று ஓரிரெண்டு நபர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அவர்களோடு இவரையும் சேர்த்து நான் மறந்து போனேன்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்பு எனது வியாபாரம் மிகவும் நலிந்து போனது. எனக்கும் வியாபாரத்தின் மீதிருந்த பற்று குறைந்து கொண்டே வந்தது. என்னையறியாமல் சற்குருவின் தேடல் தீவிரமடைந்தது. அந்தநேரத்தில் எனது நண்பர் ஒருவர் அவரது வீட்டிற்கு ஆந்திராவில் இருந்து யோகி ஒருவர் வருகிறார் என்ற தகவலை தெரிவித்தார்.

நான் அவரை பார்ப்பதற்காக நண்பரின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு யோகி அனைவருக்கும் ஆசி வழங்கிக்கொண்டிருந்தார். நானும் அவரின் முன்னால் சென்று நின்றேன். அவர் என்னைப் பார்த்ததும், சற்றே முகம் சுழித்தவராக, என்ன வேணும் என்று தெலுங்கில் கேட்டார்.

நான் அப்போது இருந்த மன நிலையில் எனது வியாபாரம் விருத்தி யாக வேண்டும் என்றுதான் கேட்க ஆசைப்பட்டேன். ஆனால் நான் அவரிடம், உங்கள் ஆசிதான் வேண்டும் என்றேன். அவரோ, "எதுக்கு" என்றார். நான் மீண்டும் உங்களைப்போன்ற யோகிகளிடம் இருந்து எனக்கு ஆசிதான் வேண்டும் என்றேன். அவர் மீண்டும் "எதுக்கு" என்றார்.

என்னால் அப்போதிருந்த மனநிலையில் அவரின் ஆழமான கூற்றை புரிந்து கொள்ளமுடியவில்லை



அதனால் மீண்டும், உங்கள் ஆசி கிடைத்தால், வியாபாரம் நன்றாக நடக்கும் என்றேன். அதுதான் "எதுக்கு" என்றார். வியாபாரம் நன்றாக நடந்தால் வீட்டில் உள்ளவர்களை நன்றாக பார்த்துக்கொள்வேன் என்றேன். அவர் சற்றே சிரித்துவிட்டு என் கண்களைப் பார்த்து அதுதான் "எதுக்கு" என்றார்.

என்னால் அப்போது அவரின் கண்களைப் பார்க்க முடியவில்லை. கண்களை தாழ்த்திக்கொண்டேன். என் உள்மனம் "நீ" பொய் சொல்கிறாய் என்று குத்திக்காட்டியது. உடனே நான் அங்கிருந்து விலகி வந்து விட்டேன். அவர் மிகவும் சத்தமாக சிரித்துவிட்டு, என் நண்பரை அழைத்து அந்த சகோதரனை இங்கேயே இருக்கச் சொல். நான் அவனிடம் பேச வேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

நண்பர் வந்து அவர் கூறியதை என்னிடம் கூறினார். நான் வேண்டா வெறுப்பாக காத்திருந்தேன். இரண்டு மணி நேரம் சென்றதும். வீட்டில் உள்ளவர்களுக்கு ஆசிவழங்கிவிட்டு தனியாக அமர்ந்திருந்தார். நான் எதேச்சையாக அவரை பார்க்க, அவர் அங்கிருந்து என்னை அழைத்தார்.

நான் உடனே அவரின் அருகில் சென்றேன். என்னை அருகில் இருந்த நாற்காலியில் அமரச்சொன்னார். நான் பரவாயில்லை சுவாமி நான் நிற்கிறேன் என்றேன். அவர் உடனே "எதுக்கு" என்று என்னைப் பார்த்து சிரித்துவிட்டு, மனிதனுக்கு, மனிதன் என்ன மரியாதை உட்கார் என்றார்.

நான் உட்கார்ந்தேன். அவர் என்னை நேராகப்பார்த்து "பெரியவரின்" ஆசி உனக்கிருக்கும்போது எனது ஆசி "எதுக்கு" என்றார். புரியவில்லை சுவாமி என்றேன். புரியாதது போன்று நடிக்க வேண்டாம். புரிகின்ற காலம் வந்து விட்டது. உன்னை உன் சற்குரு அழைக்கிறார் என்றார்.

தொடர்ந்து, வியாபாரம் செய்கிறேன், சம்பாதிக்கிறேன், வீடு வாசல், வண்டி, வாகனம் வாங்கப்போகிறேன், குடும்பத்தை காப்பாற்றுகிறேன், என்று

பொய் சொல்லாதே! அது உன்னால் முடியாது. நீ யார்? ஏன் இங்கு வந்தாய், உனது வேலை என்ன? என்பதை குடும்பத்தை காப்பாற்றப்போகிறேன் என்ற பொய்யால் மறக்கப் பார்க்கின்றாய். நீ இங்கு செய்வதெல்லாம் மாயை!

இந்த உலகப் பொருட்கள் உன்னை எவ்வளவு ஆசை காட்டி மறைத்தாலும் நீ யார் என்பதை உன்னால் மறைக்க முடியாது. அது வெளிவரும். மண் எவ்வளவு கடினமாக இருந்தாலும் மண்ணில் புதைக்கப்பட்ட நல்ல விதையில் இருந்து விருச்சம் வெளிவந்தே தீரும். அந்த காலம் வந்து விட்டது.

பிறவி பிறவியாக நீ தேடிக் கொண்டிருக்கும் இறுதியான வெற்றியை நீ பெறப்போகின்ற காலம் நெருங்கிவிட்டது. இந்த முறை இந்த வாய்ப்பை தவற விட்டு விடாதே. நீ இங்கு வந்த வேலை என்னதென்று அறிந்து செய்! உனது சொந்த வேலையை பகவான் செய்வான்.

"பெரியவர்" தனது லீலையின் சக்தியால் தன் பக்தர்களை தன் பக்கம் ஈர்க்கிறார். அதுமட்டுமல்ல அவர் பக்தர் அல்லாதவர்களை பக்தர்களாக மாற்றி, வாழ்க்கையின் தளைகளிலிருந்து விடுவிக்கிறார், எனவே அவரை ஒருபோதும் புறக்கணிக்காதே! அவர் அழைத்தும் நீ புறக்கணிக்கின்றாய்.

முந்தைய பிறவிகளின் தாக்கத்தால் தவறு ஏற்படுவது இயற்கையானது. உன்னுடைய "மனம்" ஏற்படுத்திய "மாயைகளின்" மயக்கத்திலிருந்து உன்னை விடுவித்துக் கொள்ள முடியாத சமயங்களில், உனது சற்குருவே, உன் மனதிற்கு எஜமான ராகி, உன் தவறுகளை கணக்கிட வைக்கிறார். இதுவே நீ சற்குருவை அடையக்கூடிய "முதல் படி"யாகும்.

ஆனால் உனது அகங்காரம் தவறுகளை ஏற்றுக் கொள்வதை மறுக்கும். ஆகையால், சற்குரு தனது அடித்தளத்தை தயார் செய்ய சிறிது நேரம் எடுத்துக்கொள்கிறார். அவர் உனது கடந்த கால பாவங்களை படிப்படியாக நீக்கி, உனது "நான்" என்ற பெருமையை (அகங்காரம்) அடக்கும் செயலை தொடங்குவார்.

சற்குருவின் இந்த முறையினால்,நாம் நமது தவறுகளை அவர் முன் ஒப்புக்கொள்கிறோம். இந்த வாக்குமூலம் சற்குருவை அறியும் "இரண்டாவது படி"யில் ஏறுவது போன்றது. "மூன்றாவது படி" உனக்கு எளிதாக இருப்பதுபோல் இருக்கும். ஆனால், உண்மையில் இது மிகவும்



கடினமான படி. இரண்டுபடி கடந்து விட்ட அதீத சக்தியால், நம் மனம் 'மாயாவின் மாயையின் கீழ் சுழல ஆரம்பிக்கும். செய்த தவறை மீண்டும் செய்யும், அது உன்னை புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் கொண்டு வரும்.

இதனால், மீண்டும் மீண்டும் மேலே ஏறி கீழே விழுகிறோம். ஆனால், சற்குருவின் அருளால் மட்டுமே, மூன்றாவது படியில் ஏறி, தவறை மீண்டும் செய்யாமல் உறுதியாக இருக்க முடியும். இப்போது உனக்கு நன்றாகப் புரியுமே! "பெரியவரின்" ஆசி உனக்கு கிடைத்திருக்கிறது.

நான் "பெரியவர்" என்றது உனது சற்குருவையே ஆகும். பயன்படுத்திக் கொள். வந்த வேலையும் சுலபமாக முடியும். உன் சொந்த வேலையும் தடங்கல் இல்லாது நடக்கும். ஒன்றை மட்டும் நீ நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள். உனக்கு நேரம் அதிகமில்லை. சற்குருவை தேடுவதில் அலட்சியம் காட்டாதே! இந்த நிமிடத்தில் இருந்தே ஆரம்பி. நீ நேரம் கடத்த, கடத்த உனக்கு சோதனைகள் அதிகமாகும். நீ போகலாம் என்று எனக்கு விடை கொடுத்தார்.

நான் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினேன். எனக்குள் இருந்த இருள் மெல்ல விலகியது போன்று இருந்தது. எனக்கு எல்லாம் புரிந்தது. என் சற்குரு யார் என்பதைத் தவிர. ஆனால் உடனே தேடு என்றால் தெரிந்தால்தானே தேடுவதற்கு என்று பதட்டமடையாமல் சாதாரணமாக எடுத்துக் கொண்டேன்.

இரண்டு நாள் முழுவ தும் சாமியார் கூறிய சொற் களே என் மண்டையை உருட்டிக் கொண்டிருந்தது. மூன்றாம் நாள் வியாபார நிர்பந்தம் எனது தேடுதலை மறக்கடித்தது. இரவுபகலாக வியாபார தேடுதல் எனக்கு சற்று லாபமாக இருந்ததால் சாமியாரும், அவருடைய சொற்களும் சுத்தமாக மறந்து போனது.

பத்து நாட்களுக்குப் பின்பு, எனது வியாபார நிறுவனத்திற்கு நான் அர்டர் போடாமலே, நாசிக்கில் இருந்து "சாய்கிருபா" டிரேடர்ஸ் என்ற கம்பெனியில் இருந்து எனது பெயருக்கு இரண்டு லோடு சரக்கு வந்தது. அதன் அப்போதைய மதிப்பு சுமார் பத்து லட்சங்கள்.

அப்போதைக்கு அது யார் சரக்கு, எப்படி வந்தது என்றெல்லாம் பார்க்கும் சூழ்நிலையில் நான் இல்லை. யாரோ நம்மை நம்பி அனுப்பி வைத்து இருக்கின்றார்கள். நல்ல விலைக்கு விற்று நாணயத்தை காப்பாற்றி நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று உடனடியாக இறக்கி வைத்துக் கொண்டேன்.

கடைநிறைய சரக்கு நிரம்பி இருக்கின்றது. மனம் ஏனோ ஆனந் தமாக இருந்தது. நாளை நன்றாக வியாபாரம் செய்து இழந்ததை மீட்க வேண்டும் என்று மனம் கணக்குப் போட்டது. சிப்பந்தி களிடம் காலையில் அனைவரும் விரைவாக வந்து விடுங்கள் என்று கூறிவிட்டு, வீட்டிற்குப் போகலாம்

என்று வண்டியை எடுத்தேன்.ஆனால் வண்டி வீட்டை நோக்கி போக மறுத்தது.

என் மனம் என்ன நினைத்தேனோ தெரியவில்லை திடீரென்று திருவண்ணாமலைக்குச் சென்றால் என்ன இப்போது புறப்பட்டால் கிரிவலம் முடித்து காலையில் மூன்று மணிக்கு வியாபாரத்திற்கு வந்து விடலாம். இன்று பௌர்ணமி வேறு என்று மனம் கணக்குப் போட, ஆமாம் அதுதான் சரி என்று யாரிடமும் கூறாமல், திருவண்ணாமலையை நோக்கி பயணப்பட்டேன்.

திருவண்ணாமலை சென்று மாலை 6 மணிக்கெல்லாம் கிரிவலத்தை தொடங்கி,ஏழு மணிக்கு ஸ்ரீ சேசாத்திரி ஆஸ்ரமம் சென்று தியானம் செய்ய அமரும்போது கடையில் இருந்து மேலாளர் தொலைபேசியில் அழைத்தார். எடுத்தவுடன் சார் எங்கிருக்கீங்க என்றார் படபடப்பாக,

என்ன விசயம் என்று கேட்டேன். சார் மாநகராட்சியில் இருந்து நம்ம கடையை சீல் வைச்சுட்டாங்க சார் என்றார் பதட்டமாக, சீல் வெச்சுட்டாங்களா? என்ன காரணமாம் என்று நான் கேட்க, தெரியலை சார். நீங்க வேகமா வாங்க சார். சரக்கு எல்லாம் கடைக்குள்ள மாட்டிக்கிச்சு, காலையிலே எப்படி வியாபாரம் பண்றதுன்னே தெரியலே என்று புலம்பினார்.

எனக்கோ தலை சுற்றி மயக்கம் வருவது போல் இருந்தது. பத்து லட்ச ரூபாய் சரக்கு அல்லவா உள்ளே இருக்கின்றது. யாரோ, எந்த புண்ணியவானோ என்னை நம்பி சரக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அதை நல்ல முறையில் விற்று, காசாக்கி அனுப்பி நல்ல பெயர் வாங்கினால் நமது வியாபாரம் தடங்கல் இல்லாமல் தொடரும் என்ற நினைத்தேனே! இப்படி ஆகிவிட்டதே! ஏன் கடை சீல் வைக்கப்பட்டது. யாருடைய தவறால் நடந்தது இது என்று தெரியவில்லையே! என்றவாறே பதட்டத்துடன் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறுகிறேன்.

அப்போது மூன்று அடி உயரம் கொண்ட சீரடி சாய்பாபாவின் சிலையை தூக்கிக்கொண்டு சிலர் ஆஸ்ரமத்தின் உள்ளே வருகின்றார்கள். நான் அந்த சிலைப் பார்க்கின்றேன். என் குழப்பம் எல்லாம் மறைந்து விட்டது போன்ற தொரு நிலை. என்னையறியாமல் நானும் அவர்களுடன் மீண்டும் ஆஸ்ரமத்திற்குள் செல்கின்றேன்.

உள்ளே எடுத்துச் செல்லப்பட்ட சிலை, ஸ்ரீ சேசாத்திரி சுவாமிகளின் சீவபீடத்திற்கு பின்புறம் பிரதிஷ்டை செய்யப்படுவதற்காக வைக்கப்படுகின்றது. அங்கிருந்த பக்தர்கள் சிலர், பாபா வந்துட்டாரு, பாபா வந்துட்டாரு என்று குரல் எழுப்ப,அனைவரும் பாபாவை பார்த்து வணங்க, நானும் அவரை வணங்கிவிட்டு ஒரு ஓரமாக நிற்கின்றேன்.

அப்போது யாரோ ஒரு வயதானவர் என்னருகில் வந்து, அப்பாடா பாபா வந்துட்டாரு! இனி பாபாவைத் தேடி எங்கேயும் போக வேண்டாம். வயசாயிருச்சு பாருங்கோ! சீரடிக்கெல்லாம் போயி அலையமுடியலே, ஆமா நீங்க சீரடிக்கு போயிக்கீங்கல்ல, என்று என்னைப் பார்த்து கேட்டுவிட்டு என்னுடைய பதிலை எதிர்பார்க்காமல் கிடுகிடுவென்று நடந்து சென்று விட்டார்.

எனக்கோ, என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஆனால் கடந்த பத்து நாட்களாக நடப்பவற்றை யோசித்தால், பெரியவர், சற்குரு, சீரடிபாபா எல்லாம் ஒரே நேர்க்கோட்டில் வருவதைப் போன்ற உணர்வை நான் பெறுகிறேன் ஆயினும், அதை என்னால் தொடர்ந்து

செல்ல முடியாமல் வியாபார நிர்பந்தம் என்னை தடுகின்றது. இப்போதுகூட நான் கிரிவலத்தை நிறுத்திவிட்டு உடனடியாக சென்னைக்கு செல்ல வேண்டும்.

ஏன் இந்த தடுமாற்றம். இறைவா எனக்கு தெளிவான வழியைக்காட்ட மாட்டாயா? என்றபடி இரவெல்லாம் யோசித்தபடி சென்னையை நோக்கி பயணப்பட்டு காலையில் இரண்டு மணிக்கெல்லாம் கடைக்கு வந்தேன்.

ஊழியர்கள் எல்லாம் பதட்டத்துடன் வெளியே நின்றிருக்க, நான் வந்தவுடன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப்பார்க்கின்றேன். சரக்கு அப்படியே இருக்கின்றது. காலையில் வியாபாரம் ஆரம்பித்துவிட்டது. என்னிடம் சரக்கு இருந்தும் என்னால் வியாபாரம் செய்ய முடியவில்லை.

நகராட்சி ஆணையரிடம் சென்று விபரம் கேட்கலாம் என்றால், காலையில் பத்து மணிக்குத்தான் அலுவகம் திறக்கும். அதற்குள் வியாபாரம் முடிந்து விடும்.குழப்பமான மனநிலையில் நானும் ஊழியர்களும் கடை வாசலில் நின்றிருக்கின்றோம்.

வருகின்ற வியாபாரிகளும், அருகில் உள்ள கடை முதலாளிகளும் எங்களிடம் ஏன் சீல் வைத்தார்கள் எனறு துக்கம் விசாரிப்பது போல் விசாரிக்கின்றார்கள். ஆளாளுக்கு ஒரு விளக்கம் கொடுக்கின்றார்கள். உங்கள் நிலமை இப்படி ஆயிடுச்சே என்பது போல் பார்க்கின்றார்கள், பரிதாபப்படுகின்றார்கள், ஆதங்கப்படுகின்றார்கள். எனது நிலையைக்கண்டு எனக்கே பரிதாபம் ஏற்பட்டுப் போனது.

ஒருவழியாக விடிந்தது. கடை சீல் வைக்கப்பட்ட காரணமும் தெரிய வந்தது. எனது கடை இன்னொருவருக்கு சொந்தமானது. அவரிடம் நான் வாடகை செலுத்தி கடை



நடத்துகிறேன். அவர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வருடாந்திர சொத்துவரியை செலுத்தாததினால் நகராட்சி கடையை சீல் வைத்திருப்பதை தெரிந்து கொண்டோம்.

உடனடியாக நான் கடை உரிமையாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரத்தை கூறினேன். நான் கூறிய விபரங்களை பொறுமையாக கேட்டுக் கொண்டவர்,

நான் குடும்பத்தோடு வடநாட்டில் இருக்கின்றேன்.ஊருக்கு வர ஒரு வாரம் ஆகும். என்னால் இப்போது ஒன்றும் செய்ய முடியாது. உங்களுக்கு அவசரம் என்றால் சொத்துவரி ஒன்றரை லட்சம் பாக்கி உள்ளது. நீங்கள் அந்த தொகையை கட்டிவிட்டு கடையை திறந்து கொள்ளுங்கள். வாடகையில் கழித்துக்கொள்வோம் என்றார். ஒருவாரம் ஆகுமா எந்த ஊரில் இருக்கின்றீர்கள் என்று கேட்டேன். அவர்கூறினார், "சீரடி"யில் இருக்கிறேன்.

– (தொடரும்)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

வெட்டை நோயைக் குணப்படுத்தும் கோவைக்காய்

அடிக்கடி காய்ச்சல், எப்போதும் சளித் தொந்தரவு, எந்த உணவையும் ருசித்துச் சாப்பிட்ட முடியாமை, நீரிழிவு, எப்போதும் உடலில் சூடு, ஜலதோஷம், சொறிசிரங்கு, பித்தக் கோளாறுகள் போன்ற குறைபாடுகளை நீக்குவதில் முதலிடத்தில் இருக்கும் காய்கறிகளில் கோவைக்காய் மிக முக்கியமான ஒன்றாகும்.

இது கத்தரிக்காயை விட அதிக கசப்புச் சுவையுடையது. இந்தக் குணத்தால் மேற்கண்ட வியாதிகளைக் குணப்படுத்திவிடுகிறது. கோவைக் காயைச் சமைத்தே சாப்பிடலாம். இல்லையெனில் நறுக்கப்பட்ட இக்காய்த் துண்டுகளை வெயிலில் காயப்போட்டு, அவற்றின் மீது உப்பு இட்டு மோரைத் தெளித்து மீண்டும் காயப்போட்டு வற்றல்களாக எடுத்துவைத்துக் கொண்டு பொரித்தும் சாப்பிடலாம்.


இதன் தாயகம் இந்தியா. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும், வீடுகளிலும் பரவலாகப் பயிர் செய்யப்படுகிறது.

கோவைக்காயின் வேர்கள், தண்டுகள், கீரைகள், பழங்கள் முதலியவற்றைத் தோல் வியாதிகள், நீரிழிவு, வாய்ப்புண், வயிற்றுப்புண், 'பிரான்கைட்டிஸ்' போன்ற நோய்களைக் குணப்படுத்த மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

கோவைக்காயின் இலையும் கசக்கும். ஆனால், அது மருத்துவக் குணம் கொண்டது. மற்ற கீரைகளுடன் இதைச் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் உணவுகள் விரைந்து ஜீரணமாகும்.

அடுத்த வேளை உணவு மிகவும் ருசியாய் இருக்கும்.

நாக்கு ருசி தெரியாமல் போனவர்கள் சர்க்கரையையும், உப்பையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்வார்கள். கோவைக்காயையும், கோவைக் கீரையையும் இவர்கள் சாப்பிட்டால் இவர்கள் நாக்கு மீண்டும் சக்தியுடன் உயிர் பெற்றுவிடும்.



இக்கீரை கண்ணுக்குக் குளிர்ச்சி தரும். இக்கீரையின் கஷாயம் இருமல், நீரடைப்பு முதலியவற்றை உடனே குணமாக்கும். சீதபேதியைக் குணப்படுத்த இதன் இலைச்சாற்றை அருந்த வேண்டும்.

வெட்டை நோயைக் குணப்படுத்த இக்காயின் இலைச் சாறுடன் அதே அளவு நல்லெண்ணெய், முதல் நாள் நீராகாரம் முதலியவற்றைச் சேர்த்து அருந்த வேண்டும். பத்து நாட்கள் இதுபோல் ஒரு வேளை அதிகாலையில் அருந்தி வந்தால் வெட்டை நோய் முற்றிலும் குணமாகும்.

கோவை இலைச் சாறுடன் நல்லெண்ணெயும் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தைப் படர்தாமரை மீது பூசி வந்தால் படர்தாமரை விரைவில் குணமாகும்.

கோவைக்கொடியின் வேரில் நீரில் கரையாத ஒரு வகை மரப்பிசின் இருக்கிறது. அதனால் இந்த வேரிலிருந்து எடுக்கப்படும் சாற்றை நீரிழிவு நோயாளிகளுக்குச் சித்த மருத்துவர்கள் கொடுக்கிறார்கள்.

கோவைப்பழம் மிகவும் ருசியானது. அதில் நார்ச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து முதலியவை உள்ளன. சிந்தனையாளர்களும், ஊர் விட்டு ஊர் சென்று பணிபுரிபவர்களும் இதைப் பயன்படுத்தினால் மலச்சிக்கல் ஏற்படாது. மூளையும் உடலும் சுறுசுறுப்புடன் திகழும், நன்கு பசியெடுக்கும்.

நோஞ்சான் குழந்தைகள் நன்கு வளர இதில் உள்ள இரும்புச் சத்து பயன்படுகிறது. இரத்தத்தைச் சுத்தப்படுத்தி நோய்க்கிருமிகளை அண்டவிடாதபடி செய்துவிடுவதால் தான் சித்த மருத்துவர்கள் கோவக் காய், கோவக்காய் இலை முதலியவற்றையும் பயன்படுத்திப் பெரும்பாலான நோய்களைக் குணப்படுத்தி, கைராசியான மருத்துவர் என்னும் பட்டத்தையும் தக்க வைத்துக்கொள்கிறார்கள்.

கோவக்காய், கீரை, பழம் முதலியவற்றை எல்லா வயதினரும் நன்கு உணவில் சேர்த்துக்கொண்டால் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் ஆரோக்கியமாய் வாழலாம்.

எந்த நோய்க்காரரும் விலக்கக்கூடாத காய் இது! எங்கும் தாராளமாக கிடைக்கக்கூடியது. விலையும் மலிவானது. எனவே கோவைக்காய் உங்கள் கண்களில் பட்டால் விட்டுவிடாதீர்கள் அவசியம் வாங்கி பயன் படுத்தி பயன் அடையுங்கள்.

வாழக வளமுடன்!
வாழ்க வையகம்!

மூன்று சிறிய கோவில்கள்

சமாதி மந்திர் வளாகத்திற்குள்ளே ' சனி கேட்' என்ற இடத்திற்கு எதிரில் ஒரே வரிசையில் அமைந்திருக்கும் மூன்று சிறிய கோவில்கள் அல்லது சந்நிதிகளைப் பார்க்கலாம். அவை கணபதி, சனி பகவான் மற்றும் சிவன் ஆகியோரின் சந்நிதிகளாகும்.

தனக்கு கிடைத்த தட்சிணைப் பணத்தை உபயோகித்து பாபா தான் வாழ்ந்த காலத்தில் இந்த மூன்று கோவில் களையும் செப்பனிட்டு புனருத்தாரணம் செய்தார்.



1979 ம் ஆண்டு ஜூலை மாதம் 3 ம் தேதி மீண்டும் இந்த மூன்று சந்நிதிகளும் புனருத்தாரணம் செய்யப்பட்டன.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON










HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

பொறுமை !







நம்பிக்கை!!

மூலவர் ஸ்ரீ யோக சயன சாய் (சமாதி)

108 கோடி ஸ்ரீ சாய் 11 உறுதி மொழிகள்

(SRI SAI 11 ASSURANCES)

சொல்லிக்கொண்டே செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் எழுதுங்கள்

அன்புடையீர் வணக்கம்.

108 கோடி ஸ்ரீ சாய் 11 உறுதி மொழிகள் (SRI SAI BABA 11 ASSURANCES) சொல்லிக்கொண்டே செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் எழுதி " ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவ சாயி சமேத 1 டன் எடை கொண்ட வெள்ளைகல் (White Stone) ஸ்ரீ திவ்ய சாயி அனுக்கிரஹ யந்திரத்தின் கிழியை சமர்ப்பிக்கும் கூட்டு சாதனை நிகழ்வினைக் துவக்கியுள்ளோம்.

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் அருகில் புலிவலத்தில் ஸ்ரீ யோக சயன சாய் (சமாதி) ஆலயத்தில் பாபா நிகழ்த்தப் போகும் ஒரு மிகப் பெரிய உலக அதிசயம் (SAI INCREDIBLE MIRACLE)

எழுதுங்கள் ! செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் 108 கோடி ஸ்ரீ சாயி 11 வாக்குறுதிகள் (SRI SAIBABA 11 SUTTRAS) 1 டன் எடை கொண்ட வெள்ளைகல் (White Stone) ஸ்ரீ திவ்ய சாய் அனுக்கிரஹ யந்திரத்தின் கிழியை பிரதிஸ்டை செய்யும் மஹா பாக்கியத்தைப் பெறுங்கள்.



ஸ்ரீ சாயி உறுதிமொழிகள்
(SAI 11 EKKADAS SUTTRAS)
எழுதும் செம்பு முலாம் பூசப்பட்ட தகடு

இலவசம்

உங்கள் முகவரியை 8754316316
SMS / Whatapp செய்து பெறவும்

Temple Address

SRI YOGA SAYANA SAI (SAMATHI) TEMPLE
SAI HEALTHLINE FOUNDATION
No.62/2, Kulathu Street, Saipuram, Near Sholingar,
PULIVALAM (Po) Banavaram (Via),
Ranipet Dist. Pin : 632505. Tamil Nadu

Google Pay PhonePe மூலமாகவும் செலுத்தலாம்
8754 316 316

email : shelfoundation1956@gmail.com

தொடர் –18

சாய் சரவணன்

"அதி தேவதை"



கலியுகத்தில், மனிதர்கள் பொய்யான வாழ்வை மெய்யானதாகவும், மெய்யான வாழ்வை பொய்யான தாகவும் கருதி, வாழ்வை வீணே விரயம் செய்கின்றனர். கிடைத்தற்கரிய மனிதப் பிறவி கிடைத்தும் மெய்ப்பொருளை தேடாது, சிற்றின்பத்தை தேடி வாழ்வை விரயமாக்குவது சரியா?

எப்படி எல்லாம் வாழக்கூடாதோ அப்படி எல்லாம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, அதில் இருந்து வெளியே வர முடியாமல் தவிக்கின்றார்கள். அப்படிப்பட்ட நம்மைப் போன்ற அஞ்ஞானிகளின் அறியாமையைப் போக்கவே பகவானே சற்குருவாக வந்து நம்மை ஆட்கொண்டு வழிநடத்துகிறார்.

அப்படிப்பட்ட சற்குருவை பகவானாக உணர்ந்து கொண்ட நம் அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயியின் மஹா சங்கல்பத்தை நாம் கண்

டோம். குருவும், பகவானும் ஒரேசேரக் காட்சியளித்து வாழ்ந்து கொண்டிருக்கும் புண்ணிய பூமியான சீரடியை பண்டரிபுரமாகவும், புண்ணிய சேத்திரமாகவும் மாற்ற வேண்டும் என்பது அன்னையின் ஆசை.

சாயிநாதரோ, தன் பக்தர்களை சீரடிக்கு இழுத்து அவர்களுக்கு எப்போதும் துணையாக இருந்து எண்ணற்ற லீலைகளை செய்த வண்ணம் இருந்தார். தன்னுடைய பெருமைகளை பாபா ஒருபோதும் வெளியில் காட்டிக் கொண்டதில்லை. அவருடைய கருணையே பக்தர்களை இரட்சித்தது. ஆகவேதான் பரம கருணாமூர்த்தியான அவரின் அருமை பெருமைகளை உணர்ந்த ஆத்ம பக்தையான ஸ்ரீ அன்னை பாபாவை அகிலம் அறிந்து கொள்ள வேண்டும் என சங்கல்பம் கொண்டாள்.

சீரடியை பண்டரிபுரமாகவும், சாயியை விட்டலனாகவும் நடை முறைக்கு கொண்டுவருவது சாதாரண விசயமா என்ன? பாழடைந்த மசூதி யில் வாழும் எளிமையான பக்கீர் பாபாவை பண்டரிநாதனுக்கு சமமாக பாவித்து வணங்கிய பாக்யம் அன்னைக்குத் தான் கிட்டியது. இது சாயிநாதரின் சங்கல்பம் ஆகும்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகிறார், என் அடியவர்களின் விருப்பமாகிய சங்கல்பமே எனது சங்கல்பமாகும். எனக்காக வாழும் அடியார்களின் சங்கல்பம் சுயநலமற்றதாகும். அந்த சங்கல்பத்தால் இந்த உலகிற்கு நன்மை பயக்கும். ஆகவே அடியார்க ளின் சங்கல்பத்தை நிறைவேற்றுவதே என் விரதமாகும் என்கிறார்.

கடலுடன் சேர்ந்த நதி எப்படி கடலுடன் சேர்ந்து சங்கமமானதோ, அதே போல் சாயி விட்டலனின் திருவடியில் வீழ்ந்து சரணடைந்து அவரோடு சங்கமமான ஜீவன் "தான்" என்ற பேதமில்லாமல் சலனமற்று இருக்கும். அன்னை, தான் வாழும் போதே சாயிநாதருடன் இரண்டறக் கலந்த புண்ணிய ஆத்மா.

ஸ்ரீ சாயிநாதருடைய சங்கல் பமே, அன்னையை மகா சங்கல்பம் செய்யத்தூண்டியது. இது சாயியி னுடைய லீலையே அன்றி வேறில்லை. பிருந்தாவனத்தில் அன்னை இந்த சங்கலபத்தை ஏற்றவுடன் சாயிநாதர் அங்கு தோன்றி,அன்னையின் சிரம்தன்னில் பூக்களை வீசி ஆசி தந்த அந்த அற்புதக் காட்சியை அடியேன் எவ் விதம் விவரிப்பேன்.

தன் சங்கல்பத்தை நிறைவேற்ற அன்னை இராதாகிருஷ்ணமாயி முதன் முதலில் தன் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதம் துடைப்பமே ஆகும். ஆம், உண்மையில் அந்த துடைப்பம் மிகுந்த பாக்கியசாலி. ஜடப்பொருளாக இருந்தாலும் அது செய்த பாக்கியம் தான் என்னே!

அதிகாலை வேலை தன்னில் அன்னை கையில் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு பாபா சாவடியில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, மசூதிக்குச் சென்று தரைகள்,வாசல்கள், படிக்கட்டுக்கள்,என் அனைத்தையும் சுத்தம் செய்வாள். துளியின் நெருப்பால் மசூதியின் சுவர்கள் எல லாம் கரிப்பிடித்துப் போய் இருப் பதைக் கண்டு சற்று துயர்படுவாள். உடனே சுதாரித்துக் கொண்டு இந்த நிலையும் மாறும் காலம் வரும் என

மனதை தேற்றிக்கொண்டு, சாயிநாதர் நடந்து செல்லும் பாதைகளை பெருக்குவாள்.

தெருவில் கிடக்கும் கல், முள்ளை அகற்றி பன்றிகள், நாய்களின் மலங்களை தன் கையாலேயே அகற்றி சுத்தம் செய்வாள். அன்னை வீதியை பெருக்கும் தன்மையில் ஓர் அழகு இருக்கும். சாயிநாதரின் திருவடி படும் இடத்தில் தன் பாதம் படக்கூடாது என்பதற்காக பின்புறமாகவே பெருக்கும் சாமர்த்தியம் அன்னையைத் தவிர வேறு எவருக்கும் இருந்ததில்லை.

அன்னை பெருக்கிய சிறிது நேரத்தில் சாயிநாதர் அவ்வழியாகச் சென்றால் அவரது தாமரை திருவடிபட்ட மண்ணை அள்ளி தன் தலையில் இட்டுக் கொள்ளும் அளவிற்கு பக்தி பாவத்தில் திளைத்திருப்பாள். அன்னை சீரடியின் வீதிகளை பெருக்கும் சமயம் பாலாஜி பல சமயம் உதவி புரிவதுண்டு. மகல்சாபதி, லட்சுமி, சியாமா போன்றோர் அவளது சேவையைக்கண்டு மனம் நெகிழ்வார்கள்.

ஆனால் சீரடியில் சிலரோ அன்னையின் செயல்களை தவறாக பாவித்து பொறாமைப்பட்டு பல இடைஞ்சல்களை ஏற்படுத்துவர். அத்தனை சங்கடங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தன் சேவையை தொடர்ந்த வண்ணம் இருப்பாள் அன்னை.

வீதி முழுவதும் கூட்டி பெருக்கிய



பின் பிருந்தாவனத்திற்கு தேவையான நீரை கிணற்றில் இருந்து எடுத்துச் செல்வாள். பிறகு வீட்டில் உள்ள வேலைகளை முடித்துவிட்டு சிறிது நேரம் கண்களை மூடி தியானத்தில் இருப்பாள்.அதுசமயம் பாபா லட்சுமிபாயிடம் ஒரு ரொட்டியைக் கொடுத்து ஆயிடம் கொடுக்கச் சொல்லி அனுப்புவார். லட்சுமிபாயும் சாலாவிற்குச் சென்று ஆயியிடம் ரொட்டியைத் தருவாள்.

அன்னையும் பாபாவால் தரப்பட்ட ரொட்டியை மிக்க பிரேமையுடன் உண்பாள். ஒருமுறை ஆயியிடம், லட்சுமிபாய் இந்த ஒரு ரொட்டி உனக்கு எப்படி போதும். நீ காலையில்

இருந்து பாபா நடந்து செல்லும் பாதையை எல்லாம் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்கிறாய். வேலை செய்த களைப்போ, வாட்டமோ உன் முகத்தில் நான் கண்டதில்லை.

உணவோ பாபா கொடுக்கும் இந்த ஒரு ரொட்டியைத் தவிர வேறு எதையும் நீ எடுத்துக் கொள் வதில்லை. அப்படி இருந்தும் பிரகாசமான முகமாகவே எப்போதும் இருக் கின்றாயே எப்படி என வினவினாள்.

காலம்தான் உங்கள் கேள்விக்கு பதில் கூறும். கண்டிப்பாக நீங்களே அதை உணர்ந்து கொள்வீர்கள் என்று கூறி விவாதத்திற்குச் செல்லாமல் தவிர்த்துவிடுவாள். லட்சுமிபாய் தன் வீட்டிற்குச் சென்றவுடன், அன்னை ஏக நாத பாகவதம், இராமகிருஷ்ண பரமஹம்சரின் கிரந்தங்களை பாராயணம் செய்வாள். இப்படியே நேரம் கழிய பாபா இரவு நேரத்தில் சாவடிக்கு உறங்கச் செல்வார்.

பாபா சாவடியில் உறங்கச் சென் றதை உறுதிப்படுத்திக்கொண்டு, அன்னை அப்துல்லாவை அழைத்துக் கொண்டு துவாரகாமாயிக்குச் செல் வாள். அப்துல்லாவோ, பாபா சாவடியில் இருக்கும்போது நாம் ஏன் துவாரகாமாயிக்குச் செல்ல வேண்டும் என்று கேட்பான்.

அதற்கு அன்னை சாயிமகராஜின் பூத உடல் வேண்டு மானால் சாவடியில் இருக்கலாம். ஆனால் அவர் எங்கும் உள்ளார். துவாரகாமாயி முழுக்க அவரது சான்னித்தியம் நிரம்பி வழிகின்றது.

துவாரகாமாயியின் ஒவ்வொரு இடத்திலும், தூணிலும், எரிகின்ற நெருப்பிலும், துளசி வனத்திலும் எங்கும் அவரைத் தவிர வேறு எதுவும் இல்லை. நாம் எங்கு என்ன செய்தாலும் அவருக்குத் தெரியும். என்றாள் அன்னை.

அன்னையின் ஞானத்தை நினைத்து வியந்து ஏதும் பேசாமல் அவளின் பின்னே சென்றான் அப்துல்லா. துவாரகாமாயி சென்ற அன்னை கையில் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு துவாரகாமாயியை சுத்தமாக கூட்டிப் பெருக்கி, மாட்டு சாணத்தால் மெழுகி வண்ணக் கோலங்கள் இட்டாள். இவைக்களுக் கிடையே மெல்லிய குரலில் பாடிக்கொண்டே இருப்பாள்.

திடீரென அப்படியே சமாதிபாவத் தில் திளைத்து நிற்பாள். இதை எல்லாம் அருகில் இருந்து கண்டு வியந்துபோவான் அப்துல்லா.

சில மணிநேரம் கழித்து சமாதி பாவத்தில் இருந்து மீண்டு நடுநிசி வரை வேலை செய்வாள். சீரடியே தூங்கிக்கொண்டிருக்க, அப்துல் லாவும் தூங்கிவழிவான். அவனை சாலாவிற்கு சென்று தூங்கச் சொல்லிவிட்டு, அன்னை தன் ஆத்மபந்துவான சா யிநாதரையே நினைந்து, நினைந்து விடியும்வரை தியானம் செய்வாள்.

இப்படியாகத்தான் அன்னை சீரடியில் தன் நித்ய சேவையை ஆரம்பித்தாள். இந்த சேவை அவளது லட்சியத்தில் சிறு அங்கமாகத்தான் இருந்தது.

இனி படிப்படியாக என்னவெல்லாம் செய்யலாம் என சிந்தித்து சதா குருநாதரின் அருளை நாடியே வாழ்ந்து வந்தாள் அன்னை.

– (தொடரும்)

சமையல்காரனான பாண்டுரங்கன்

அது கல்யாண வீடு என்பதற்கு வாசலில் இருந்த இரண்டு வாழை மரங்களே சாட்சியாக நின்றிருந்தன. வேறு எந்த ஆர்ப்பரிப்பும் அங்கு இல்லை.

ஆடம்பரமாக திருமணத்தை நடத்த அது ஒன்றும் பணக்காரரின் வீடும் அல்ல, ஏதோ ஒரு தொழில் செய்து அதன் மூலம் வரும் வருமானத்தை வைத்து பிழைக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவரின் வீடும் அல்ல.

தனக்கும், தன் மனைவி மற்றும் மகளுக்கும் தேவையான உணவை, தினமும் உஞ்ச விருத்தி எடுத்து சாப்பிட்டு வரும், பாண்டுரங்கனின் பரம பக்தனான நீலோபாவின் வீடு. பிம்பளம் என்ற அழகிய நகரத்தின் நடுவே அமைந்திருந்த நீலோபாவின் வீட்டில்தான் திருமண நிகழ்ச்சி.

அழகு இருந்தும், பணம் இல்லாததால் தன் மகளுக்கு திருமணம் நடைபெறுமா? என்ற கவலையில் தவித்து வந்தார் நீலோபாவின் மனைவி. ஆனால் 'எல்லாம் இறைவனுக்குத் தெரியும். அவன் பார்த்துக் கொள்வான்' என்று அவன்மேல் பாரத்தைப் போட்டு விட்டு, பகவானின் பாதத்தை பணிவதிலேயே தன் காலத்தைக் கழித்து வந்தார் நீலோபா.

இந்த நிலையில் நீலோபா புதல்வியின் அழகில் மயங்கிய வாலிபன் ஒருவன், அவளை மணம் செய்து கொள்ள வலிய வந்தான். அவனும் ஏழைதான் என்றாலும், அழகிலும் வலிமையிலும் சிறந்தவனாக இருந்தான். திருமணத்திற்கான நாள் குறிக்கப்பட்டு, அந்த நாளும் நெருங்கி விட்டது.

நாளையப் பொழுதில் திருமணம். ஆனால் நீலோபாவின் வீடு உறவுகளின் கலகலப்பின்றி காணப்பட்டது. நீலோபாவின் வீட்டில் பணப் பஞ்சம் என்பதால், அவரது உறவினர்களின் மனதில் அன்புப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. அதனால்தான் நீலோபாவின் வீடு வெறிச்சோடிப் போய் கிடந்தது.

எங்கே திருமணம் வீட்டிற்கு முன்பாகவே சென்றால், பொருள் உதவி செய்ய வேண்டியிருக்குமோ என்ற எண்ணத்தில் உறவினர்கள் எவரும் வந்து சேரவில்லை.

இரக்க குணம் படைத்த பணக்காரர்கள் சிலர் கொடுத்த காய்கறி, பழங்கள், மளிகை பொருட்கள், இலை போன்றவை கொஞ்சம் இருந்தது.

ஆனால் அவை திருமணத்திற்கு வருபவர்களுக்கு விருந்து வைக்க போதுமானதாக இருக்குமா? என்று நீலோபாவின் மனைவி கவலையில் ஆழ்ந்தாள்.

அப்போது வீட்டின் வாசலில் முதியவர் ஒருவர் வந்து நின்றார். வெளியே வந்த நீலோபாவிடம், 'ஏன்பா! நீலோபா என்பது நீதானா. உன் மகளுக்கு நாளை கல்யாணமாமே?' என்று கேட்டார் முதியவர்.

ஆமாம் அய்யா 'எல்லாம் இறைவனின் சித்தம். அய்யா! தாங்கள் யாரென்று தெரியவில்லையே? நீங்கள்



எந்த ஊர்?' என்று பணிவாக கேட்டார் நீலோபா.

அதற்கு முதியவர், 'எனக்கு ஏது ஊரு? எல்லா ஊரும் நம்ம ஊருதான். குருவாயூர், மதுரா, பிருந்தாவனம், கோகுலம், உடுப்பி.. இப்படி ஊர் ஊராய் போய் பிச்சை எடுத்து வயிறு வளர்க்கிறேன்' என்று கூறிக் கொண்டே, தான் அணிந்திருந்த கந்தல் துணியில் போட்டிருந்த சிறு சிறு முடிச்சுகளை அவிழ்க்கத் தொடங்கினார்.

'ஐயா! எனக்கு இப்போது அபார பசி. என்னிடம் இருக்கும் இந்த அரிசி, பருப்பு, காய்கறி, புளி, மிளகாய் போன்றவற்றை வாங்கிக்கொண்டு, கொஞ்சம் சாப்பாடு போட்டால் நல்லது' என்றார் முதியவர்.

நீலோபா அவரைத் தடுத்து, 'திருமண வீட்டில் சாப்பாட்டுக்கு பஞ்சமா?. உள்ளே போய் பசியார உணவு அருந்துங்கள். அரிசி, பருப்பு கொடுத்து தான் சாப்பிட வேண்டுமா?' என்று கூறினார்.

'நீலோபா! இந்த பிச்சைக்காரனிடம் அரிசி, பருப்பு வாங்குவதற்கு உனக்கு அவமானமாக இருக்கிறது போலும். நானும் மானம் உள்ளவன்தான். எனக்கு உன் வீட்டு சாப்பாடு வேண்டாம்' என்று கூறி அங்கிருந்து புறப்படத் தயாரானார்.

பதறிப்போய் அவரை தடுத்தார் நீலோபா. 'ஐயா! சற்று நில்லுங்கள். நான் அந்த அர்த்தத்தில் கூறவில்லை. தாராளமாக நீங்கள் கொடுக்க வந்த பொருட்களை தாருங்கள்' என்று கூறியவர், தன் மனைவியை அழைத்து அதனை வாங்கிக் கொள்ளும்படி கூறினார்.

முதியவரிடம் இருந்து பொருட்களை நீலோபாவின் மனைவி பெற்றுக் கொண்டாள். அவளிடம், 'தாயே! இதனை கல்யாண சமையலுக்கு வைத்திருக்கும் பொருட்களோடு சேர்க்க வேண்டும்' என்றார் முதியவர். அவளும் அப்படியே செய்தாள். அதன்பிறகு முதியவருக்கு உணவு அளித்தனர். அதனை அவரும் சாப்பிட்டு முடித்தார்.

அப்போது சமையல் அறையில் நீலோபாவின் மனைவியும், மகளும் கல்யாண சமையல் பொருட்களை தரம் பிரித்து வைத்துக் கொண்டிருப்பதை பார்த்தார்.

'என்ன! அனைத்து வேலைகளையும் கல்யாண பொண்ணும், அம்மாவும் செய்து கொண்டிருக்கின்றீர்கள். வேலைக்கு ஆட்கள் வைத்துக் கொள்ளக் கூடாதா?' என்று நீலோபாவிடம் கேட்டார் முதியவர்.

நீளோபா வருத்தம் தோய்ந்த குரலில், 'ஐயா! நானே உஞ்சவிருத்தி பெற்று சாப்பிடுபவன். நான் எப்படி வேலைக்கு ஆள் வைத்துக் கொள்ள முடியும்?' என்றார்.

'அப்படியானால் நாளைக்கு சமையல்?' என்று முதியவர் கேட்க, சீக்கிரமே எழுந்து சமையலை நாங்களே முடிக்க வேண்டியதுதான்.என்றார் நீளோபா. 'நன்றாக இருக்கிறது! தன்னுடைய கல்யாணத்திற்கு மணப்பெண்ணே சமைப்பதா? நன்றாக இருக்கிறது! நாளைக்கு அடுப்படிப் பக்கம் நீங்கள் யாருமே வரக்கூடாது. நான் நன்றாக சமைப்பேன்.

சிக்கனமாய், அதே நேரத்தில் சுவையாய், மணமாய், விதவிதமான சமையல் செய்வேன். திருமண விருந்திற்கு என்னென்ன வேண்டும்? என்பது எனக்குத் தெரியும். நான் பார்த்துக் கொள்கிறேன். நாளை திருமணத்திற்கு வரும் அனைவரையும் வரவேற்று, விருந்துண்ண அனுப்ப வேண்டியது மட்டும்தான் உங்கள் வேலை' என்று கூறிவிட்டார் முதியவர்.

அவரது வார்த்தையைக் கேட்டதும் மகிழ்ந்து போனார் நீளோபா. 'அந்த பகவானே உங்களை இங்கு அனுப்பி வைத்ததாக கருதுகிறேன். மிக்க மகிழ்ச்சி' என்றார். உடனடியாக பெரியவர் அடுப்படியில் நுழைந்தவர்தான், அனைத்து பணிகளையும் பார்க்கத் தொடங்கிவிட்டார். இரவு நேரங்கழித்து தூங்கி, வெகு அதிகாலையிலேயே எழுந்து சமையல் பணி அனைத்தையும் தான் ஒருவராகவே முடித்துவிட்டார்.

திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரும் சமையலை 'ஆஹா, ஓகோ' என புகழ்ந்து தள்ளிவிட்டனர். அந்த வர்ணிப்பைக் கேட்டு நாக்கில் எச்சில் ஊற சாப்பிட வந்தவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

'என்ன நீளோபா,திருமணத்திற்கு வீடு தேடி வந்து அழைத்தாய் வராவிட்டால் ஏழை என்று ஒதுக்கி விட்டதாக நினைத்து கொள்வாய் என்று தான், அவசர வேலைகளைக் கூட அப்படியே போட்டு விட்டு வந்தேன்' என்று கூறியபடி வந்த உறவினர்கள் அனைவரும் திருமண விருந்தைக் கண்டு வாயடைத்து போய்விட்டார்கள்.

விருந்தில் அத்தனை பதார்த்தங்களை இதுவரை எவரும் பார்த்திருக்க மாட்டார்கள். லட்டு, முறுக்கு, அதிரசம் என்று கண்களை கவர்ந்தன. சமையலை வாசனை மூக்கைத் துளைத்தது, முந்திரியும், பாதாமும் முதல் பந்தியில் சாப்பிட்டவர்களை, அடுத்த பந்திக்கும் இழுத்தது.

விருந்தினர்களும், மாப்பிள்ளை வீட்டாரும், சம்பந்தியும் நீளோபாவை பாராட்டித் தள்ளினர். திருமணம் முடிந்து மாப்பிள்ளை வீட்டார் மற்றும் உறவினர்கள் அனைவரும் சென்று விட்டனர். நீளோபா, தன்னை அனைவரும் பாராட்டியதற்கு காரணமான முதியவரைக் கண்டு நன்றி தெரிவிக்க மடப்பள்ளிக்கு சென்றார்.

ஆனால் முதியவரை காணவில்லை. அங்கே சமையல் பொருட்கள் குறையாமல் அப்படியே இருப்பது கண்டு திகைத்தார். வந்தவர் சாதாரணமானவர் அல்ல என்பது அவருக்கு பரிந்தது.

அவரது எண்ணம் பொய்யில்லை என்பதை, மடப்பள்ளியில் சிலையாக நின்று கொண்டிருந்த பாண்டுரங்கனின் விக்கிரகம் மெய்ப்பித்தது. ஆம் பெரியவரை தேடிய நீளோபாவின் கண்களுக்கு பெரியவருக்குப் பதில் அங்கே பாண்டுரங்கனின் விக்கிரகம் தான் கண்களில் பட்டது.



பைரவ சாய் பீடம்

மேல காரைக்காடு, திருநாராயணபுரம் - 621203
தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு
Cell : + 91 9976919106, 6380762294

உங்கள் வாழ்வில் தீராத பிரச்சனைகள் கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் 15 நாட்களில் தீர்வு பெற சாய் தீப பூஜை மற்றும் துனி பரிகார ஹோமம். அனுபவ முறை

உங்கள் வாழ்வில் தொடர் துன்பம் வறுமையா? - தீராத நோயா? தீராத கடனா? - திருமண தடை ஏற்படுகிறதா? - குழந்தை பாக்கியம் இல்லையா? - வேலை கிடைக்க வில்லையா? - தொழில் முன்னேற்றம் இல்லையா?

- எதிரிகள் தொல்லையா? - வீட்டில் எப்பொழுதும் சண்டையா? - கணவன் மனைவி பிரிவா? - சொத்து தகராரா? தகாத உறவா - குழந்தைகள் நன்கு படிக்க வில்லையா? கையில் பணம் தங்க வில்லையா?

பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் உங்கள் வீட்டில் 5 நாட்கள் சூட்சும முறையில் தீபம் ஏற்றி வழிபாடு செய்வதன் மூலம் 15 தினங்களுக்குள் உங்கள் வாழ்வில் நிச்சயம் மாற்றம் முன்னேற்ம் வெற்றியினை ஏற்படுத்த முடியும்.

நம்பிக்கை உள்ளவர்கள் தீபம் ஏற்றும் முறை உச்சரிக்க வேண்டிய மந்திரம் பெற 9976919106 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு தீப பூஜை என மெசேஜ் மட்டும் செய்து இலவசமாக உபதேசம் பெற்றுக கொள்ளவும்.
எவ்வித கட்டணங்களும் கிடையாது.

ஞான முதல்வன் திருஞான சம்பந்தன்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில், சோழவள நாட்டில் சீர்காழி என்னும் ஊரில் திருஞான சம்பந்தன் பிறந்தார். இவரது தந்தையார் சிவபாதவிருதயர். தாயார் பகவதி அம்மையார்.

இவர் மூன்று வயது குழந்தையாக இருந்தபோது, தந்தையாருடன் கோயிலுக்குச் சென்றார். அங்கே குழந்தையைக் கரையில் அமரவிட்டுக்

குளிக்கச் சென்ற தந்தையார், சிறிது நேரம் நீருள் மூழ்கியிருந்த சமயம், தந்தையைக் காணாத குழந்தை, அம்மா அப்பா என்று கூவி அழுததாகவும், அப்போது உமா தேவியார், சிவபெருமானுடன் காட்சி கொடுத்து ஞானப்பால் ஊட்டியதாகவும், அதனைப் பருகிய குழந்தை சிவஞானத்தைப் பெற்றதாகவும் கூறுவர்.

நீராடி முடித்து விட்டு வந்த தந்தை வாயில் இருந்து பால் வடிவதைக் கண்டார். அது பற்றி குழந்தையிடம் வினவிய போது, குழந்தை கோயிலைச் சுட்டிக்காட்டித் "தோடுடைய செவியன்" என்று தொடங்கும் தேவாரத்தைப் பாடினார் என்றும் சொல்லப்படுகிறது.

உலகியலுக்கேற்ப

ஞானசம்பந்தருக்கு ஏழாம் வயதில் உபநயனம் நடைபெற்றது. ஓதாமலே வேதத்தை உணர்ந்த ஞானியாகிய திருஞான சம்பந்தர்,அங்கு வந்திருந்த பெரியோர்களுக்கு தோன்றிய ஐயங்களை அகற்றி, வேத முடிவாகிய



ஐந்தெழுத்தின் பெருமையைத் "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" என்ற திருப்பதிகமாகப் பாடி விளக்கியருளினார்.

ஆச்சாள்புரக் கல்வெட்டுத் தகவல்படி, திருஞானசம்பந்தரின் மனைவி பெயர் சொக்கியார்.திருஞான சம்பந்தரின் வரலாற்றைப் பெரிய புராணத்தில் 1256 பாடல்களால் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விவரித்துள்ளார். இவர் வரலாற்றை முதன் முதலில் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில்,வம்பறா வரிவண்டு

மணம்நாற மலரும் மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணாத எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்` எனக் குறிப்பிட்டு அருளி யதோடு, தாம் அருளிய தேவாரத் திருப் பதிகங்களிலும் திருஞானசம்பந்தர் பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார்.

ஆளுடைய பிள்ளையார், பாலாரா வயர், பரசமய கோளரி என்பன அவரது வேறு பெயர்களில் சிலவாகும். அவர் பதினாறு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து வைகாசி மூல நாளில் நல்லூர் பெருமணம் என்று அறியப்படும் ஆச்சாள்புரத்தில் எழுந்த சிவ சோதியில் கலந்தார்.

சமணர்களை வெற்றி கொள்ள வேண்டி மதுரை சென்ற போது, மதுரைக்குக் கிழக்கு வாயில் வழியாகச் செல்ல வேண்டும் என்று கருதி, மதுரையின் கிழக்கு எல்லையாக விளங்கும் திருப்பூவணத்தின் (தற் போது திருப்புவனம்) வைகை ஆற்றின் வடகரையை வந்து அடைந்தார். வைகை ஆற்றில் கால் வைக்க முயன்றபோது, ஆற்று மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சி அளித்தன. எனவே அங்கு நின்றபடியே தென்திருப்பூவணமே என முடியும் பதிகத்தைப் பாடினார்.

சிவபெருமான், நந்தியைச் சாய்ந் திருக்கச் சொல்லிக் காட்சி அருளினார். இதனால் திருப்பூவணத்திலே நந்தி முதுகு சாய்ந்தபடி உள்ளது. வைகை ஆற்றின் தென்கரையில் உள்ள சிவலிங்கத்தை, வடகரையில் உள்ள ஆடித்தபசு மண்டபத்தில் நின்றே இன்றும் தரிசிக்கலாம்.

திருமருகல் தலத்திற்குச் சென்று முருகப் பெருமானை வழிபட்ட வேளை, இறைவன் அருளால் தன் மனதிலே திருச்செங்காட்டங்குடி தலத்தை அமைத்து வழிபடும் பேறு பெற்றார். இவ் அதிசயத்தால் "மனக் கோயில் அமைத்த சம்பந்தர்" எனும் பெயரையும் பெற்றார்

பின்னர், திருக்கோலக்காவிற்கு எழுந்தருளினார். கையினால் தாளம் இட்டு “மடையில் வாளை” என்ற திருப்பதிகம் பாடினார். பாட்டிற்கு உருகும் பரமன், சம்பந்தருக்கு கை நோவுமென்று ஐந்தெழுத்து



வரையப்பெற்ற பொற்றாளம் ஒன்றை அருளி ஆசி புரிந்தார்.

இவர் பெருமை கேட்ட மக்கள், தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டினர். முதலில் தமது தாய் பிறந்த ஊராகிய திருநனிபள்ளி சென்றார். சம்பந்தரின் பெருமையைக் கேள்வியுற்ற திருநீலகண்ட யாழ்ப் பாணர், தம்முடைய மனைவியோடு சீர்காழிக்கு வந்து அவரை தரிசித்தார். அவரது பாடல்களுக்கு யாழ் வாசித்தார். அது முதல் சம்பந்தருடனே இருந்து அவரது பாடல்களையெல்லாம் யாழில் அமைத்து வாசித்து வரலானார்.

திருஞானசம்பந்தர் தில்லை முதலிய பல தலங்களையும் தரிசித்து விட்டு நடுநாட்டில் உள்ள திருநெல் வா யிலரத்துறை என்ற ஊருக்குச் சென்றார். திருஞானசம்பந்தரது பெருமையைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசரும், அவரைக் காண்பதற்குச் சீர்காழிக்கு எழுந்தருளினார்.

சம்பந்தரும் அவரை எதிர்கொண்டு அழைத்தார். இருவரும் அருட்கடலும் அன்புக்கடலுமாகத் திகழ்ந்தனர். பின்னர், ஞானசம்பந்தர் திருப்பாச் சிலாச்சிராமம் பணிந்து கொல்லிமழவன் மகளைப் பிடித்து நின்ற முயலகன் என்னும் நோயைப் போக்கினார்.

திருச்செங்கோடு என வழங்கும் திருகொடிமாடச் செங்குன்றூர் சென்ற போது தன்னுடைய அடியவர்களை விஷசுரம் பற்றியது. திருநீலகண்டத் திருப்பதிகம் பாடி, அவ்விச நோயைப் போக்கினார். பின்னர் பட்டீச்சுரத்தை அடைந்தபோது வெயில் மிகுதியாக இருந்ததால், சிவபெருமானின் திருவருளால் சிவபூதம் ஒன்று சம்பந்தருக்கு முத்துப்பந்தல் ஒன்றைக் கொடுத்தது.

பிறகு திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர் தரிசித்தார். திருநாவுக்கரசரைக் கண்டு அவர் வாயிலாக ஆரூரில் நிகழ்ந்த ஆதிரைச் சிறப்பைக் கேட்டு ஆரூரானைத் தொழுதார். பிறகு அப்பரும், சம்பந்தரும் திருவீழிமிழலை சேர்ந்தனர். அவ்வூர்ப்பெருமான், தோணியப்பரைப் போல் காட்சி தந்தார். அது கண்ட இருவரும் அவ்வூரிலேயே சிலநாள் தங்கினர். அப்பொழுது நாட்டில் பஞ்சம் உண்டாயிற்று. பரமன் அளித்த படிக்காசு கொண்டு இருவரும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னமளித்து கைகரியம் செய்தனர்.

பிறகு (வேதாரணியம்) திருமறைக் காடு சென்றனர். நேரே கும்பிட எண்ணியவர்களாய் மறைகளால் பூசித்து அடைக்கப்பட்டிருந்த கதவினைத் திருநாவுக்கரசர் பாடலால் திறக்கச்செய்து, பிறகு தாம் பாடி திறந்த கதவை அடைக்கச் செய்தார். அது முதல் திறக்கவும் அடைக்கவுமாக இருந்து வருகிறது அக்கதவு.

பாண்டி நாட்டில் நெடுமாற பாண்டியன் சமண சமயம் சார்ந்து இருந்தமையை மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் என்ற இருவர் வா யிலாகத் தெரிந்து மதுரைக்குப் புறப்பட்டார். நாளும் கோளும் நலமில் லாதிருந்தும் உமையொருபாகன் உள்ளத்து விருப்பத்தால் “அவை நல்ல நல்ல” என “கோளறுபதிகம்” பாடி, ஏகினார். பாண்டியன் வெப்புநோயை “திருநீற்றுப் பதிகம்” பாடி அகற்றினார். அனல் வாதத்தைப் பச்சை பதிகம் பாடியும், புனல் வாதத்தாலும் சமணர்களை வென்றார்.

பாண்டிய மன்னனையும், பாண்டி நாட்டு மக்களையும் சைவம்



தழுவச்செய்தார். பாண்டி நாட்டில் உள்ள தலங்களைத் தரிசித்தார். சோழநாடு மீண்டார். பிறகு, பல தலங்களைத் தரிசித்துவிட்டுத் திருப்பூந்துருத்தி அடைந்தார். அப்பர் சுவாமிகள் இவரது சிவிகையைத் தாங்கியமையறிந்து உடனே கீழிறங்கி இருவரும் அளவளாவி இருந்தனர். திருஒத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கிக் காய்க்கச் செய்தார்.

மயிலாப்பூர் சிவநேசச் செட்டியாரின் மகள் பூம்பாவை பாம்பு தீண்டி இறக்க, அவளது எலும்பைக் குடத்தில் சேமித்து வைத்தார் சிவநேசர். அதனை அறிந்த ஞானசம்பந்தர் திருக்கோயில் முன் அக்குடத்தை கொணர்வித்து “மட்டிட்ட புன்னை” என்ற பதிகம் பாடி பூம்பாவையை உயிர்ப்பித்தார்.

பெற்றோர் விருப்பத்திற்கிணங்க, வேத நெறியில் நின்று, நம்பியாண்டார் நம்பிகள் திருமகளை மணமகளாக ஏற்று இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும் "அந்தமில் சிவன் தாள் சேர்வன்" என்ற கருத்தமையக் கல்லூர்ப்பெருமணம் என்ற பதிகம் பாடினார். பெருமானது அசரீரியின்படி மனைவியோடும் உடன் வந்தாரோடும் வைகாசி மூல நன்னாளில் அங்கு தோன்றிய சோதியில் கலந்தார்.

திருஞான சம்பந்த மூர்த்தி கோயில் ஒன்று தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் பேய்க்கரும்பன்கோட்டை என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு சிறப்பாகக் கட்டப்பட்டது.

இக்கோயிலில் சம்பந்தரே, மூலவராகவும் உற்சவ மூர்த்தியாகவும் உள்ளார். வருடாவருடம் வைகாசி மாதத்தில், இக்கோயிலில் இவ்வூர் மக்களால் சிறப்பாக திருவிழா நடத்தப்பட்டு, உற்சவ மூர்த்தி பல்லக்கில் அலங்கரிக்கப்பட்டு, வீதிகளில் உலாவருவார். மேலும், மார்கழி மாதத்தில் தினமும் அதிகாலையில் இவ்வூர் தேவார அடியார் குழுவால் தேவாரப் பாடல்களும், பதிகங்களும் பாடப்பெற்றுச் சம்பந்தருக்கு பூஜைகள் செய்யப்படுகின்றன.

இத்தலம், தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையில், புலவன்காடு என்ற ஊரிலிருந்து கிழக்கே ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. தஞ்சையிலிருந்து 35 கிலோமீட்டர் தெற்கில் உள்ளது இவ்வூர்.

திருச்சிற்றம்பலம்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

நல்லதை வழங்கும் நாம ஜபம்!

உலக இன்பங்களில் கவனம் செலுத்தும் நம் அவயங்களை இறைவன் பால் திருப்ப அவர் கதையை பேசுவதும் கேட்பதும் ஒரு வழி, ஆனால் எல்லோராலும் எப்பொழுதும் அதைச் செய்ய முடியாது. அதனால் மிக எளிய வழி பகவான் பெயரைச் சொல்லி வருவது. அதுவே நாம ஸ்மரணை அல்லது நாம ஜபம்.

கலி யுகத்திற்கென்று இருக்கும் ஒரு மாபெரும் சிறந்த குணம், பகவானின் திருநாமத்தைச் சொல்வதாலேயே நாம் எளிதில் முக்தி பெற முடியும். நாம ஜபத்தினால் மட்டுமே ரஜோ, தாமச, சாத்விக குணங்களிலிருந்து விடுபட்டு, உயர்ந்த இடமான கிருஷ்ண உலகத்தை அடைய முடியும் என்று ஸ்ரீமத் பாகவதம் (12.3.51) கூறுகிறது.

இறை நாமம் இறைவனைவிட வலிமை மிகுந்தது. அனுமன் சீதையை கண்டுபிடித்ததும், இலங்கைக்குப் பாலம் கட்டியதும் இராம நாம மகிமையால் தான். ராமனை விட ராம நாமத்துக்கு வலிமை அதிகம். நாமாவில் இறைவனின் குணம், சக்தி, மகிமை, தத்துவம் அனைத்தும் அடங்கியுள்ளன. அதோடு கூட சொல்லின் சக்தியும் அதனுள் அடங்கியுள்ளது.

ஒவ்வொரு பெயரிலும் உள்ள அட்சரங்களின் கோர்வையால் தோன்றும் ஒலி அற்புதமான ஆன்மீக உள்ளுணர்வை விழித்தெழச் செய்கிறது.



நினைத்த உடனே பகவான் நம் பாவனையில் தோன்றி மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனால் நாமத்தை உச்சரிக்கும்போது நம் பாவங்கள் அகன்று உள்ளத் தூய்மை ஏற்படுத்தி பக்தியையும் ஞானத்தையும் வளர்க்கிறது.

முக்தியை அடைவதற்கு இதை விட எளிய வழி கிடையாது. இதில் எத்தனை முறை ஜபிக்கிறோம் என்ற எண்ணிக்கையில் கவனம் செலுத்துவதைவிட எவ்வளவு ஆழ்ந்து தியானிக்கிறோம் என்பதே முக்கியம்.

கலியுகத்தில் மக்கள் குறைந்த

ஆயுளை உடையவர்கள், ஆன்மீகத்தில் ஆர்வம் இருக்காது, எப்பொழுதும் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொண்டு துன்புறுபவர்களாக இருப்பார்கள். அதனால் இவற்றிற்கு ஒரே நிவாரணம், இறைவனின் திருநாமத்தை ஜபம் செய்வதுதான்.

மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் குரு ஸ்ரீ ராமதாசர், கூறியதற்கிணங்க சிவாஜி, ஸ்ரீ பக்த துக்காராமை தரிசிக்க செல்கிறார். ஸ்ரீ பக்த துக்காராம் ஒரு வேளை உணவுக்கே கஷ்டப்படுவதாகத் தெரிந்து பெரிய பெரிய தட்டுகளில் நவமணிகளையும், பொன்னையும் பொருளையும், 18 கிராமங்களை அவர் பெயருக்கு எழுதிய சாசனங்களையும் எடுத்துக் கொண்டு அவரை காணச் சென்றார் சிவாஜி.

அப்போது தனது ஊர்த் திடலில், ஊர் மக்கள் பெரும் திரளாய் அமர்ந்திருக்க, தன்னை மறந்து 'அபங்' பாடிக்கொண்டு இருந்தார் ஸ்ரீ பக்த துக்காராம். மன்னர் பரிவாரங்களுடன் வருவதைக் கண்ட மக்கள் அவருக்கு மரியாதை செலுத்தும் வண்ணம் எழுந்து வழிவிட்டார்கள். ஆனால், பீடத்தில் அமர்ந்திருந்த துக்காராம் எழுந்திருக்கவும் இல்லை வணக்கம் தெரிவிக்கவும் இல்லை. தொடர்ந்து பஜனை செய்துகொண்டே இருந்தார்.

சத்ரபதி சிவாஜியும் மக்களோடு மக்களாக அமர்ந்து பஜனையில் கலந்துகொண்டார். பஜனை முடிந்த பின் துக்காராம் கீழே வந்து மன்னரை வணங்கினார். இறை நாமங்களைக் கொண்ட 'அபங்' பாட அமர்ந்துவிட்டால், அது வியாச பீடமாகிவிடும். வியாச பீடத்தில் இருப்பவரே உயர்ந்தவர். அப்பீடத்தில்



அமர்ந்திருக்கும்பொழுது தன்னைக் காண வருபவர் மன்னரே ஆனாலும், மரியாதை செலுத்த முடியாது. எனவே, தற்போது தான் வணக்கம் தெரிவிப்பதாக கூறினார்.

பொன், பொருள், தனம், சாசனங்கள் தனக்குத் தேவையில்லை என்றும் அன்றன்றைய உணவைத் தனக்கு அளிப்பவர் விட்டல்தான் என்றும் கூறி துக்காராம் சிவாஜி கொண்டு வந்ததை பெற மறுத்துவிட்டார். இதுவே நாம ஜபம் செய்வதின் மூலம் கிடைக்கப் பெறும் பலனும், வைராக்கியமும் ஆகும்.

ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் காஞ்சி காமகோடி பீடத்தின் 59வது பீடாதிபதி ஆவார். ராம நாம மகிமையை விளக்கும் நூல்களை உலகுக்குத் தந்தவர் அவர். தன் வாழ்நாளை ராமநாம ஜபத்திலும் ராம நாமத்தின் மகிமையை பரப்புவதிலும் செலவழித்தார்.

கும்பகோணம், மயிலாடுதுறை



சாலையில், ஆடுதுறைக்கும் திருவிடை மருதூருக்கும் இடையே கோவிந்தபுரம் கிராமத்தில் ஸ்ரீபோதேந்திரரின் பிருந்தாவனம் இருக்கிறது. இன்றளவும் ஸ்ரீ போதேந்திராள் சுவாமிகள் பிருந்தாவனத்தில் ராம என்கிற நாம ஜபம் காதில் கேட்பது அங்கு ஜபம் செய்தவர்களின் அனுபவமாக உள்ளது.

இலங்கை செல்ல வானர சேனை பாலம் அமைத்த போது, இராமன் என்று பெயர் எழுதிய பாறைகள் கடலில் மிதந்தன. அதைக் கண்ட ராமன் தானே ஒரு பாறையை கடலில் எறிய அது மூழ்கியது. எனவே ராமனை விட ராம நாமம் மிகச் சிறந்தது. இந்த காரணத்தால் தான் ராமபக்த ஹனுமான் ராமன் வைகுண்டம் சென்ற பிறகு அவனைப் பின்தொடர்ந்து செல்லாமல் இப்பூவுலகில் தங்கி அவன் நாமத்தைப் பாடிக் கொண்டு இங்கேயே வசிக்கிறார்.

காசி விஸ்வநாதர் கோவிலில் மாலை வழிபாட்டின் போது ஒவ் வொரு நாளும், வில்வ தளங்களில் சந்தனத்தால் ராம நாமம் எழுதி, அவற்றை விஸ்வநாதருக்கு சமர்ப்பிக்கிறார்கள்.

இன்ன நாமம் தான் என்றில்லை. நம் இஷ்ட தெய்வத்தின் நாமத்தை இடைவிடாது ஜெபித்தால் அதற்குரிய பலன் கிடைக்கும். எப்படி வால்மீகிக்கு மரா மரா என்று சொல்லியே இறைவனின் அருள் கிட்டியதோ அது போல நாம் ஒரு முகச் சிந்தனையோடு நல்ல மனத்துடன் எந்த நாமத்தை சொன்னாலும் அது நன்றே.

நூறு விஷயங்களை விட்டு விட்டு ஒருவன் தன் உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆயிரம் விஷயங்களை விட்டு விட்டு ஒருவன் குளிக்க வேண்டும். லட்சம் விஷயங்களை விட்டு விட்டு தானம் கொடுக்கச் செல்ல வேண்டும். ஒரு கோடி விஷயங்களை விட்டு விட்டு நாம ஜப பஜனைக்குச் செல்ல வேண்டும் என்பது பெரியோர் வாக்கு.

கூட்டுப் பிரார்த்தனை செய்வது உடலுக்கு நல்லது. சுவீடனிலுள்ள கோதன்பர்க் பல்கலைக்கழகம் நடத்திய ஆராய்ச்சியின்படி எல்லோரும் கூட்டாக சேர்ந்து உரத்த குரலில் பாடுவது இருதயத் துடிப்பையும் நாடித் துடிப்பையும் ஒழுங்குபடுத்துகிறது என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். இத்தகவல் லண்டன் மெட்ரோ பத்திரிக்கையில் 2013 ஜூலை 9ஆம் தேதி செய்தியாக வந்திருந்தது.

மார்கழி மாதம் தேவர்களின் அதிகாலை நேரம். இறைவன் விழித்தெழும் சமயம் என்பதால் தேவர்கள் முன்கூட்டியே எழுந்து இறைவனை திருப்பள்ளி எழுச்சி செய்யத் தயாராகும் காலம் அது.

அந்த சமயத்தில் சுவாமியை புகழ்ந்து பாடி வணங்கினால் தேவர்கள் மனம் மகிழ்ந்து நம் நோய் நீக்கி குடும்பத்தில் செல்வத்தை பெருக வைப்பர் என்பது ஐதிகம்.

அதனால்தான் மார்கழி மாதத்தில் அதிகாலை நேரத்தில் கடவுள் திருநாமங்களைச் சொல்லி பஜனை செய்திடும் பழக்கத்தை ஏற்படுத்தப்பட்டது. திருப்பாவை திருவெம்பாவை இரண்டும் மார்கழி மாத விடியலில் கோஷ்டியாக சொல்லப்படும் பாசுரங்கள் ஆகும்.

வாக்குகளில் நான் 'ஓம்' என்ற ஓரெழுத்து என்கிறார் பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையில். அத்தனை பெருமை மிக்கது நாம ஜபம். பிறவி சுழற்சியிலிருந்து விடுபட விஷ்ணு சகஸ்ரநாமத்தை ஜெபித்தால் நல்லது என பீஷ்மர் கூறுகிறார்.

ஸ்ரீ பக்த துக்காராம், நாம ஜபத்தின் பெருமைகளை பலமுறை நிரூபித்துக் காட்டியுள்ளார். ஒரு முறை அவரின் பக்கத்து வீட்டில் வசித்தப் பெண்களுக்கு இடையே பெரிய சண்டை மூண்டது. அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் ஒன்றாக வறட்டி தட்டினார்கள். அவை உலர்ந்த பின்பு எல்லாம் ஒன்றாக கலந்து விட்டன. யாருடையது எவ்வளவு என்று தெரிந்து கொள்ள முடியாமல் சண்டை வந்து விட்டது.

இதைப் பார்த்த துக்காரம் தான் அதை பிரித்துக் கொடுப்பதாகக் கூறினார். குவிக்கப்பட்ட வறட்டிகளை காதின் அருகே வைத்துக் கேட்டபின் இரண்டு பிரிவாகப் பிரித்தார். பின் அவர்களைப் பார்த்து அம்மா, நீங்கள் இருவரும் வறட்டி தட்டும்போது விட்டல விட்டல என்று கூறி தட்டியது யார் என்று கேட்டார். நாமம் சொல்லி



வறட்டி தட்டிய அப்பெண் முன் வந்து தான் தட்டியதாகக் கூறினால். இடப் பக்கம் குவியல் அவளுடையது, வலப் பக்கக் குவியல் இன்னொரு பெண் உடையது என்று தீர்ப்பு வழங்கினார்.

இதை எப்படி கண்டுபிடித்தீர்கள் என்று கேட்ட கூடியிருந்தோரிடம், துக்காராம், நாம் இறைவனின் திருநாமம் சொல்லும்போது நாம அலைகள் சுற்றுப்புறம் முழுவதும் பரவும், நாம அதிர்வுகள் இந்த வறட்டியில் உள்ளன. அதை வைத்துக் கண்டுபிடித்தேன் என்று கூறினார்.

நாம ஜபம் செய்ய இடம் பார்க்க வேண்டியதில்லை, நேரம் பார்க்க வேண்டியதில்லை. அது நம்மையும் தூய்மைப் படுத்தி நம்மை சுற்றியுள்ள இடத்தையும் தூய்மைப் படுத்துகிறது.

துருவன், பிரஹ்லாதன் அனைவரும் நாம ஸ்மரணை செய்த பக்தர்கள். ஸ்ரீ ரமண மஹர்ஷி 16 வயதில் மௌனமான சாதனை ஆரம்பித்தவர்.

ஸ்ரீ துளசிதாசர் ராம நாம ஜெபத்தின் மகிமை கூறும்போது"ரா"

என்ற எழுத்து சொல்லும் போது பாபங்கள் வெளி ஏறி விடும். "ம் " சொல்லும் போது மீண்டும் பாபங் கள் வராது, ராம்,ராம் என்றாலே இறைவனருள் கிட்டும் என்கிறார். ஸ்ரீ கபீர்தாஸ் ராமநாமத்தை உச்ச ரிப்பதை மேன்மையாக கருதுபவர்.

ஸ்ரீ அருணகிரிநாதர் இறை வனால் தடுத்தாட் கொண்டு 'சும்மா இரு சொல் அற' என்ற உபதேசம் பெற்று ஐம்புலன்கள் அடக்கி தவம் செய்து திருப்புகழ் அமிர்தம் படைத்தவர். நந்தனாரின் பக்தி, மீரா, ஆண்டாள், கண்ணப்பர் போன்றோர் பக்திமட்டும் தெரிந்தவர்கள் . எனவே நாம ஜபம் கலியுகத்தில் இன்னல் களைந்து நன்மைதரும் என்பதற்கு இவர்கள் அனைவரின் செயல்பாடுகளில் இருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.

இறைவனுடைய திருப்புகழைப் பாடுவதுகுறித்து தெய்வப் புலவர் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

இறைவனுடைய மெய்மை சேர்ந்த புகழைச் சொல்லிக் கொண்டிரு ப்பவனிடத்தில், அறியாமையாகிய இருளைச் சேர்க்கின்ற இருவகை வினையும் சேராது."

ஹரி நாம ஸங்கீர்த்தனத்தில் நாம் ஈடுபட்டால், நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளிலிருந்தும் நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த இருவகையான வினைகளே அறியாமை என்னும் ஜட வாழ்வினை நமக்குக் கொடுக்கின்றன.



சண்டைகளும் சச்சரவுகளும் நிறைந்த கலி யுகத்தில் முக்தியைப் பெற ஒரே வழி பகவானின் நாமத்தை உச்சரிப்பது மட்டுமே. இதைத் தவிர வேறு வழியில்லை,

நம் மனமே ஆலயம். அந்த இறைவனை உள்ளத்தில் இருத்தி இடைவிடாது நாம ஜபம் செய்து வணங்கலாம். ஜப மாலை கூட அவசியம் இல்லை. அதே போல நோய்வாய் பட்டிருப்பவர்கள், வயது முதிர்ந்தவர்கள் இறைவனை இருந்த இடத்தில் இருந்து தொழ மிக எளிய வழி நாம ஜபம்.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். பள்ளி படிப்பின் பளு அதிகமுள்ள இக்காலத்தில் குழந்தைகளும் நாம ஸ்மரணை செய்து மன அழுத்தத்தில் இருந்து விடுபடலாம். சின்ன வயது முதலே

இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தினால் பின்னாளில் அவர்களுக்கு இது பேருதவியாக இருக்கும்.

நம் வீட்டு பூஜை அறையின் முன் விளக்கேற்றி நாம ஜபம் செய்யலாம். படுத்தபடி கூட நாம் ஜெப செய்யலாம். எந்தத் தவறும் இல்லை. நம்மிடமுள்ள எல்லா வகை ஆணவங்களையும், பற்றுகளையும் இந்த நாம ஜபம் விரட்டி விடும். கடவுளிடத்தில் நமக்கு உண்மையான அன்பு உதிக்கச் செய்யும்.

தினம் பத்து நிமிடம் என்று ஆரம்பித்து நாம ஜபம் செய்யும் நேரத்தை அதிகரிக்கலாம். மற்ற செயல்கள் செய்யும்போதும் மனம் நாமத்தை ஜெபித்துக்கொண்டே இருக்க நாம் பழகிக் கொள்ளலாம். நமது வாழ்க்கையில் பலன்கள் மீது பற்று வைக்காமல் செயல்களை மட்டும் கவனமாக செய்ய இந்தப் பயிற்சி மிக உதவியாக இருக்கும். இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து செய்தால் ஆனந்தமும் மன நிம்மதியும் உருவாகுவதை நீங்கள் நிச்சயம் உணர்வீர்கள்.

ஓம் ஸ்ரீ ஜெய் சாய்ராம்!

தாஸ்கணு மகராஜ்



ஒரு சாதாரண போலீஸ் காவலராக பணிபுரிந்த தாஸ்கணு பாபாவின் அருளால் மிகச்சிறந்த உபந்யாசகராக, கவிஞராக மாற்றப்பட்டார். மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள அடித்தட்டு கிராம மக்களும் பாபாவைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள உதவியவர்.

ஸ்ரீமத் பக்த விஜயத்தை தினமும் உபந்யாசம் செய்வார். அந்த உபந்யாச மேடையில் பாபாவின் படமும் இருக்கும். உபந்யாசத்தின் நடுவில் பாபாவை பற்றியும் அவர் நிகழ்த்திய லீலைகளைப் பற்றியும் விளக்குவார். இவற்றைக் கேட்ட கிராமத்து மக்கள் பாபாவை தரிசனம் செய்ய சீரடிப் பயணம் செய்வார்கள்.

"சீரடி மாஜே பண்டரிபுர பாபாரமாவர" அதாவது சீரடியே என் பண்டரிபுரம். அங்கு உறையும் சாயிபாபாவே விட்டல் என்ற பொருள் கொண்ட ஆரத்தி பாடலை இயற்றியவர்.

அதேபோல் சாயி நாத ஸ்தவன மஞ்சரி என்ற நூலை இயற்றி, பாபாவிடம் படித்துக் காட்டி ஆசி வாங்கியவர்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் ஜீவசமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் அயனாவரம் ஞானகுரு ஸ்ரீ இராகவசாமி ஜீவபீடத்தை தரிசனம் செய்வோம் வாருங்கள்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஞானகுரு ஸ்ரீ இராகவசாமி

சென்னையில் பல சித்தர்கள் வாழ்ந்து இருக்கிறார்கள், அவதரித்தும் இருக்கிறார்கள். சென்னையில் ஜீவசமாதிகள் அதிகம் உள்ளன. அப்படிப்பட்ட ஆன்மீக பூமியான சென்னையில் வாழ்ந்து ஞானத்தை பெற்ற ஸ்ரீ இராகவசாமிகள் செங்கல்பட்டு புலிப்பாக்கம் மலையில் ஜீவபீடம் கொண்டுள்ளார்.

ஸ்ரீ இராகவசாமிகளின் பெற்றோர் அப்பாசாமி, அலமேலு என்பதாகும். அப்பாசாமியும் ஞானத்தைத் தேடி சித்த நிலையை அடைந்தவரே. இவருக்கு மூன்றாவது மகனாக 06.07.1919 அன்று ஸ்ரீ இராகவசாமிகள் அவதரித்தார். ஸ்ரீ இராகவசாமிகளின் தந்தையார் அப்பாசாமி ஞானத்தை தேடிச் சென்றவர் வீடு திரும்பவில்லை.

இந்த நிலையில் அன்னை அலமேலு அம்மையார் தனது நான்கு பிள்ளைகளுக்கும் கல்வியறிவை கொடுத்து வளர்த்து ஆளாக்கி பருவம் வந்ததும் நான்கு பேருக்கும் திருமணம் செய்து வைத்தார்.



ஸ்ரீ இராகவசாமிகளுக்கு சரஸ்வதி என்ற மங்கையை திருமணம் செய்து வைத்தனர். சரஸ்வதி அம்மாள் தமிழும், ஆங்கிலமும் கற்ற சிறந்த கல்வியாளர். அதன் மூலம் ஸ்ரீ இராகவ சாமிகள் ஆங்கிலம் கற்றுக்

கொண்டார். இவர்களுக்கு 6 ஆண் குழந்தைகள், 5 பெண் குழந்தைகள்.

ஸ்ரீ இராகவசாமிகள் சுவாமிகள் தென்னக இரயில்வேயில் 40 வருட காலங்கள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். சுவாமிகளுக்கு சிறு வயது முதலே ஆன்மீக பற்று அதிகம். ஸ்ரீ மகாகுரு இரத்தினவேல் சாமிகளை குருவாக ஏற்றுக் கொண்டு ஆன்மீக சாதனைகளையும், பணியையும், செய்து வந்தார்.

தன் குருநாதர் வாழ்ந்து வந்த சென்னை தேனாம்பேட்டைக்கு, தான் வாழ்ந்து வரும் சென்னை கீழ்ப்பாக்கம் வீட்டிலிருந்து நடந்தே சென்று குருவை தரிசனம் செய்து பின்பு நடந்தே வீடு வந்து சேர்வார. ஞான மார்க்கத்தில் தன்னை தானே உணர்ந்து பகட்டின்றி எளிமையாக மிகச் சாதாரணமாக வாழ்ந்து வந்தார் ஸ்ரீ இராகவசாமிகள்.

ஸ்ரீ இராகவசாமிகள் வீட்டில் தினமும் எந்நேரமும் பூஜைகள் செய்து வந்தார். சிலைக்களுக்கோ, படங்களுக்கோ அல்ல தன்னைத் தானே உணர்ந்து உள்ளிருக்கும் நாதனுக்கு பூஜை செய்து கொண்டிருப்பார்.

சுவாமிகள் அதிகாலையில் வீட்டின் அருகில் உள்ள தேனீர் கடைக்கு சென்று விட்டு தேனீரைக் குடித்து, சிகரெட்டை புகைத்து எல்லோரிடமும் சகஜமாக பேசிவிட்டு வீட்டிற்கு வந்து விடுவார். வந்தவுடன் தன் அறையில் தவத்தை மேற்கொள்வார். இப்படி 50 ஆண்டுகள் தவநிலையிலேயே இருந்தார்.

ஒருநாள் தனக்கு மார்பு வலிக்கிறது என்று தன் மகன்களின் துணையோடு மருத்துவமனைக்கு சென்றார். இவரை பரிசோதித்த மருத்துவர் இவருக்கு எந்த நோயும் இல்லை, இவர் வீட்டிற்கு செல்லாம் என்று கூறிவிட்டார். போகும் போது வாகனத்தில் சென்ற சாமிகள் வரும்போது நடந்தே தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

சுவாமிகள் சித்த மருத்துவத்தில்



ஆர்வம் கொண்டு சில குருமார்களின் துணையோடு தானே மருத்துவம் செய்வதில் வல்லவரானார். இரசவாதம் மற்றும் பல சித்துக்களை செய்து மக்களை காப்பாற்றியுள்ளார்.

சுவாமிகளைப்பற்றி கேள்விப்பட்ட இரயில்வே ஊழியர்கள், பகுதி மக்கள், அரசியல் பிரமுகர்கள், நீதிபதிகள், வக்கீல்கள் என அனைவரும் சாமிகளை தரிசனம் செய்து சுகம் பெற்றனர். நள்ளிரவு 12 மணியளவிலும் மக்கள் இவரை தரிசனம் செய்தனர். சாமிகளும் சலிக்காமல் அவர்களுக்கு அருள் ஆசி வழங்கினார்.

சுவாமிகள் தன் சீடர் ஒருவர் மருத்துவமனையில் இருக்கிறார், அவர் இறந்து விடுவார் என சொல்ல விரைந்து சென்ற சுவாமிகள் தன் சீடரின் கைகளைப் பற்றினார். அடுத்த நிமிடமே சீடர் எழுந்து அமர்ந்து விட்டாராம். சுவாமிகள் பல உயிர்களை இப்படி காப்பாற்றியுள்ளார். பில்லி, சூனியம் என்று இவரிடம் வந்தால் கூட குணப்படுத்தி விடுவார். அப்பேற்பட்ட வல்லமை படைத்தவர் நம் சுவாமிகள்.

சுவாமிகளின் சீடர்களாக 2000 பேர்



இருந்துள்ளனர். இதில் அதிகம் பேர் சுவாமிகளிடம் தீட்சைப் பெற்று ஞானம் அடைந்துள்ளனர். தன் சீடர்களுக்கு ஞானத்தை போதித்து, ஆத்ம தரிசனமும் காணச் செய்தார். தினமும் இரண்டு இட்டிலியை சக்கரையில் தொட்டு உண்டு வாழ்ந்தார். வெறும் தரையில் படுத்து உறங்குவார்.

சமாதியடையும் முன்பாக ஐந்து வருடங்களாக தன்னுடைய கட்டை விரலை மற்ற விரல்களுக்குள் மடக்கி வைத்து விடுவார். முருகமணி என்ற மருத்துவர் கட்டை விரலை எடுக்க எவ்வளவு முயற்சி செய்தும் முடியவில்லை.

சுவாமிகள் தன்னை குரு என்று சொல்லி கொண்டதில்லை. ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்து தனது 11 பிள்ளைகளுக்கும் கல்வியறிவை தந்து திருமணம் செய்து வைத்து ஆசி வழங்கினார். இல்லற ஞானியாக நம் சுவாமிகள் இல்லறத்தில் இருந்து கொண்டே ஞானத்தை தேடிய மகாகுருநாதர்.

நமது சுவாமிகள் "யோகமார்க்கம்", "இறைத்தேடல்" என இரண்டு அற்புதமான நூல்களை படைத்துள்ளார். சுவாமிகள் யாரிடமும் எதையும் வாங்கமாட்டார். இவருக்கு வீடு, மனை கொடுக்க இவரது சீடர்கள் பலர் முன் வந்தனர். கடைசிவரை எதையும் ஏற்க மறுத்து விட்டார். குடிசையிலேயே வாழ்ந்து தன் வாழ்வை நிறைவாழ்வாக வாழ்ந்தார்.

செங்கல்பட்டு அருகில் உள்ள சுங்கச்சாவடி அருகில் உள்ள புலிப்பாக்கம் மலையில் வியாக்ரபுரீஸ்வரர் ஆலயம் உள்ளது. அங்கு சுவாமிகள் ஒரு மண்டபம் கட்டி வைத்துள்ளார். ஆலயத்திற்குச் சென்றால் தான் கட்டிய மண்டபத்தில்தான் தவம் இருப்பார்.

சுவாமிகள் வந்து சென்ற பிறகு அக்கோவிலுக்கு மின்சாரம், மலைப்பாதை போன்ற வசதிகள் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. பின்னாளில் சுவாமிகளின்



சீடர்கள் துணையோடு அவர் தவம் இயற்றிய அந்த மண்டபத்தில் 05.06.2010 அன்று ஜீவசமாதியானார். முறைப்படி அவரின் சீடர்கள் புலிப்பாக்கம் மலையில் அவர் தவமியற்றிய அதே மண்டபத்தில் ஜீவசமாதி வைத்து வழி பட்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில தேதி அடிப்படையில் அவரின் குருபூஜை நடக்கிறது. ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் சுவாமிகள் வாழ்ந்த கீழ்பாக்கம் வீட்டின் அருகில் அன்னதானம் செய்து வருகின்றனர்.

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்! சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!

ஜீவசமாதி முகவரி; ஞானகுரு ஸ்ரீ இராகவசாமி ஜீவபீடம், புலிப்பாக்கம் மலை, செங்கல்பட்டு.

செங்கல்பட்டு அருகில் உள்ள சுங்கச்சாவடி அருகில் பெயர் பலகை இருக்கும். அதன் வழியே சென்றால் ஸ்ரீ வியாக்ரபுரீஸ்வரர் கோயிலை காணலாம். அதன் பக்கத்தில் நம்முடைய சுவாமிகளின் ஜீவபீட கோவில் உள்ளது.

மலைமீது பைக், காரில் செல்லலாம்.

பேருந்து மார்க்கம்:

சென்னை கோயம்பேடு புலிப்பாக்கம் தாம்பரம் புலிப்பாக்கம்

இறங்கும் இடம்: புலிபாக்கம்

இரயில் மார்க்கம்: சென்னை கடற்கரை செங்கல்பட்டு

இறங்கும் இடம்: செங்கல்பட்டு

அங்கிருந்து ஷேர் ஆட்டோ, பஸ்மூலம் புலிபாக்கம் மலை அடிவாரத்தை அடையலாம்.

- (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK

AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056

(Purasaiwakkam Branch) Chennai

Gpay: 63851 29372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி.லலிதா ராஜேந்திரன். சாலிகிராமம்.ரூ.5000

திரு.பாலகிருஷ்ணன். அண்ணாநகர் ரூ.3000.

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.

திருமதி.உமா மகேஸ்வரி. அயனாவரம். ரூ.2000.

திருமதி.தமயந்தி,சரஸ்வதி.வடலூர். ரூ.2000.

திரு.முரளிசாய்ராம். திருநின்றவூர். ரூ1000.

திரு.பி.ராஜகோபாலன்.நங்கநல்லூர். ரூ.1000.

திருமதி.கமலம் குருசாமி. AYK.ரூ.1000.

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800

வி.எஸ்.வசுந்தரா.மயிலாப்பூர்.ரூ.500

திரு. ஈஸ்வர். ஈரோடு. ரூ.500.
திருமதி.சுகன்யா.சென்னை.ரூ.500.
திருமதி.நித்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு.சோலைமுத்து.சென்னை.ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திருமதி.யோகானந்தம் மகேஸ்வரன், மதுரை . ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.200
திரு.ஜெயதேனிஷா. சென்னை.ரூ.200
திரு.உமா முருகன்.சின்னாளப்பட்டி. ரூ.200
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திருமதி.பத்மா. திருவல்லிக்கேணி. ரூ.200
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.பிரியாகுடும்பத்தார்.அயனாவரம்.ரூ.105
திருமதி. இந்துமதி.அயனாவரம்.ரூ.100
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திருமதி.பத்மா. AYK. ரூ.100.
திருமதி.கமலா. வேளச்சேரி.ரூ.100.
திரு.என்.கோபிநாத்.பெரியார்நகர். ரூ.100.
திரு.வேலு. டைலர் பெரியார்நகர்.ரூ.50
சிவா அரிசி கடை. பெரியார் நகர்.ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை.அரிசி 25 கி.
திருமதி.பிரியா சுரேஷ், கேரளா. ரூ.201

என் பொருட்டு நீ பிறருக்கு
செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என்
வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திருமதி.சிவகாமி.சென்னை.ரூ.501.
திருமதி.சுமதி. வாழ்க வளமுடன் கொளத்தூர். ரூ.500.
திருமதி.திலகம்.குரோம்பேட்டை.ரூ.320.
திரு. உதி.மூர்த்தி. பெரம்பூர்.ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்


அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068